# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 – 2023

### மானியக் கோரிக்கை எண். 52

## மு.க. ஸ்டாலின்
முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | | 1–7 |
| 2. | மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 | | 8–15 |
| 3. | மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை | | 15–17 |
| 4. | நிறுவனங்களுக்கான பதிவு மற்றும் அங்கீகாரம் | | 17 |
| | 4.1. | மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மனநல மறுவாழ்வு மையங்களுக்கான பதிவு | 18 |
| 5. | மாநில அரசின் திட்டங்கள் | | 18 |
| | 5.1. | மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சேவைகள் | 18 |
| | 5.1.1. | செவித்திறன் குறைபாடு | 18 |

| | | | |
|---|---|---|---|
| | 5.1.2. | பச்சிளங் குழந்தைகளுக்கான காதுகேளாமை கண்டறியும் திட்டம் | 19 |
| | 5.1.3. | மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் | 20-22 |
| | 5.1.4. | குழந்தைகளின் தாமத வளர்ச்சியை வீட்டிற்கே சென்று கண்டறிவதற்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் | 23 |
| | 5.1.5. | ஆரம்ப நிலை பயிற்சி மைய குழந்தைகளுக்கான இணை உணவு மற்றும் சத்துணவு வழங்கும் திட்டம் | 23-24 |





| | | | |
|---|---|---|---|
| | 5.1.6. | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயின்று வரும் குழந்தைகள், பராமரிப்பாளர்கள், சிறப்பாசிரியர்களுக்கான ஒரு நாள் சுற்றுலா திட்டம் | 24-25 |
| | 5.1.7. | மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் | 25-26 |
| | 5.1.8. | மீட்புத் திட்டம் | 26-27 |
| | 5.1.9. | 14 வயதிற்கு மேற்பட்ட அறிவுசார் குறையுடையோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 27-28 |
| | 5.1.10. | மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக் கான மறுவாழ்வு இல்லங்கள் | 29-30 |

| | | | |
|---|---|---|---|
| | 5.1.11. | இடைநிலை பராமரிப்பு மையங்கள் | 30 |
| | 5.1.12. | தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அரசு மறுவாழ்வு இல்லங்கள் | 31–33 |
| | 5.1.13. | இரவலர்கள் முகாம் – மேல்பாக்கம் | 33 |
| | 5.1.14. | அறிவுசார் குறைபாடுடைய குழந்தைகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையங்கள் | 34–35 |
| | 5.1.15. | தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் | 35–36 |
| | 5.1.16. | மாநில வள மற்றும் பயிற்சி மையம்– சென்னை | 36–37 |





| | | | |
|---|---|---|---|
| | 5.1.17. | மண்டல வள மற்றும் பயிற்சி மையம்– திருச்சிராப்பள்ளி | 37–38 |
| | 5.2. சிறப்புக் கல்வி | | 39 |
| | 5.2.1. | சிறப்புப் பள்ளிகள் | 39–41 |
| | 5.2.2. | கல்வி உதவித்தொகை | 41–42 |
| | 5.2.3. | வாசிப்பாளர் உதவித்தொகை | 43–44 |
| | 5.2.4. | தேர்வு எழுத உதவுவோருக்கான உதவித்தொகை | 44 |
| | 5.2.5. | மாணவர்களின் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகை | 45–46 |
| | 5.2.6. | அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப்பள்ளிகளுக்கு நிதியுதவி | 46–49 |

| | | | |
|---|---|---|---|
| | 5.2.7. | சட்டம் பயின்ற பட்டதாரி மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை | 49 |
| | 5.2.8. | சீருடைகள் | 50 |
| | 5.2.9. | மின்னணு உதவி உபகரணங்கள் | 51 |
| | 5.2.9 (அ) | மின்னணு பிரெய்லி உபகரணங்கள் | 51 |
| | 5.2.9. (ஆ) | ஆவாஸ் மென்பொருளுடன் கூடிய கையடக்க கருவி | 52 |
| | 5.2.9. (இ) | ஏஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர் | 53 |
| | 5.2.10. | செவித்திறன் குறைபாடுடையோருக்கான திறன் வகுப்புகள் | 54 |
| | 5.2.11. | பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான திறன் வகுப்புகள் | 55 |

| | | | |
|---|---|---|---|
| | 5.2.12. | கணினி ஆய்வகங்கள் மற்றும் கணினி பயிற்றுவிப்பாளர்களுக்கான சம்பளம் | 56 |
| | 5.2.13. | செவித்திறன் மற்றும் பேச்சு திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு | 57-58 |
| | 5.2.14. | ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா மற்றும் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (RKMVERI) – கோயம்புத்தூர் | 58-59 |
| | 5.3. | மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் | 59-65 |

| | | | |
|---|---|---|---|
| | 5.3.1 | மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களின் மாதிரிகளை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறை | 65-67 |
| | 5.4. | சமூக பாதுகாப்பு திட்டங்கள் | 67 |
| | 5.4.1. | பராமரிப்பு உதவித்தொகை | 68-70 |
| | 5.4.2. | அதிக உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை | 70-71 |
| | 5.4.3. | படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை | 71-72 |
| | 5.4.4 | திருமண உதவித்தொகை | 72-73 |





| | | | |
|---|---|---|---|
| | 5.4.5. | இலவச பயணச்சலுகை | 73 |
| | 5.4.5. (அ) | நூறு சதவீத இலவச பயணச்சலுகை | 73 |
| | 5.4.5. (ஆ) | 75 சதவீத இலவச பயணச்சலுகை | 74 |
| | 5.4.6. | தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் | 74-79 |
| | 5.4.7. | முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் | 80-81 |
| | 5.4.8. | புறஉலகச் சிந்தனையற்றோர், மூளைமுடக்கு வாதம் (CP), அறிவுசார் குறையுடையோர் (MR), பல்வகை மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கான தேசிய அறக்கட்டளை சட்டம், 1999. | 81 |

| | | | |
|---|---|---|---|
| | 5.4.9. | சமூக–பொருளாதார அதிகாரமளிக்கும் திட்டங்கள் | 82 |
| | 5.4.9. (அ) | மாற்றுத்திறனாளிகளுக்கு நான்கு சதவீத இட ஒதுக்கீட்டின் மூலம் வேலைவாய்ப்புகளை உறுதிப்படுத்துதல் | 82–83 |
| | 5.4.9. (ஆ) | அளவிடக்கூடிய குறைபாடுயுடையோருக்கு உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் ஐந்து சதவீத இடஒதுக்கீடு | 83 |
| | 5.4.9. (இ) | மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்க அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் | 84 |





| | | | |
|---|---|---|---|
| | | தேர்வாணையம் நடத்தும் தொகுதி – 1 முதல்நிலை தேர்வில் தேர்ச்சிப்பெறும் மாணவ, மாணவியருக்கு முதன்மைத் தேர்வு எழுத வழங்கும் ஊக்கத்தொகை | |
| | 5.5. | சுய வேலைவாய்ப்பு | 85 |
| | 5.5.1 | தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்( NHFDC) | 85 |
| | 5.5.2. | குறுதொழில் மற்றும் பெட்டிக்கடை தொடங்க நிதியுதவி | 85–86 |
| | 5.5.3. | பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) | 86–87 |

| | | | |
|---|---|---|---|
| | 5.5.4. | வேலை வாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) | 88–89 |
| | 5.5.5. | ஆவின் விற்பனை மையம் அமைப்பதற்கான நிதியுதவி | 89–90 |
| | 5.5.6. | புத்தகக் கட்டுநர் பயிற்சி | 90–91 |
| | 5.5.7. | மாற்றுத்திறனாளிகளுக்கு பல்லூடகப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி | 91–92 |
| | 5.5.8. | செவித்திறன் குறைபாடுடையோருக்கான பொருத்துநர் பயிற்சி | 92 |
| | 5.5.9. | சம வாய்ப்புக் கொள்கை | 92–93 |





| | | | |
|---|---|---|---|
| | 5.5.10. | மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம் (DELC) | 93–97 |
| 6. | ஒன்றிய அரசு திட்டங்கள் | | 98 |
| | 6.1. | மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்களை வாங்குதல் பொருத்துதலுக்கான உதவி திட்டம் (ADIP) | 98–99 |
| | 6.2. | தீனதயாள் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் (DDRS) | 99–100 |
| | 6.3. | தடையற்ற சூழலை ஏற்படுத்தும் விழிப்புணர்வு பிரச்சாரம் | 100–101 |

| | | | |
|---|---|---|---|
| | 6.4. | மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை (திவ்யாங்ஜன்) | 101–103 |
| | 6.5. | தனித்துவம் வாய்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை (UDID) திட்டம் | 103–105 |
| 7. | உரிமைகள் திட்டம் | | 105–109 |
| 8. | நீடித்த அபிவிருத்திக்கான இலக்குகள் (SDG) | | 109–113 |
| 9. | தடைகளற்ற சூழலை உருவாக்குதல் | | 113–114 |
| 10. | மாநில விருதுகள் | | 114–116 |
| | 10.1. | மாற்றுத்திறனாளிகளின் சர்வதேச தினத்தை அனுசரித்தல் மற்றும் மாநில விருதுகளை வழங்குதல் | 116–120 |
| 11. | புதிய முன்னெடுப்புகள் | | 120 |





| | | | |
|---|---|---|---|
| | 11.1. | மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை உயர்த்தி வழங்குதல் | 120–121 |
| | 11.2. | சிறப்பாசிரியர்களுக்கு மதிப்பூதியத்தினை உயர்த்தி வழங்குதல் | 121 |
| | 11.3. | மாற்றுத்திறனாளி மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகள் வெளியீடு | 121 |
| | 11.4. | மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களின் மாதிரிகளை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறையை அறிமுகப்படுத்துதல் | 122–123 |
| | 11.5. | இ – சேவை அறிமுகப்படுத்துதல் | 123 |
| | 11.6. | சம வாய்ப்புக் கொள்கை | 124 |
| 12. | முடிவுரை | | 124–125 |

**மாற்றுத்திறனாளிகள் நலத்துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு – 2022-2023**

**மானியக் கோரிக்கை எண். 52**

## 1. முன்னுரை

மாற்றுத்திறனாளிகள் நலனையும் அவர்களின் உரிமைகளையும் பாதுகாக்க தேவையான சட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. மாநில அரசானது மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழ ஏதுவாக தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக தமிழ்நாடு அரசு கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுக்கும்போது, மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016, ஒன்றிய அரசு மற்றும் ஐக்கிய நாடுகளின் தீர்மானங்கள், நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அவற்றினை செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக உள்ளடக்கிய சமுதாயத்தினை உருவாக்க வலியுறுத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசு, "பசியின்மை", "வறுமையின்மை", "வேறுபாட்டினைக் களைதல்", "ஒருவரையும் விடுபடாத நிலை", "நலிவுற்றவர்களுக்கு முன்னுரிமை அளித்தல்" உள்ளிட்ட இலக்குகளை அடைவதற்கான முன்னோடி திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

சர்வதேச தர அளவிலான இத்தகைய கொள்கைகளின் வெளிப்பாடாக தமிழ்நாடு அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கு ஆரம்ப நிலையிலேயே குறைகளைக் கண்டறிந்து பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், பள்ளி கல்வி மற்றும் உயர்கல்வி, வாழ்வாதாரம், நலவாழ்வு, எளிதில் அணுகுதல் மற்றும் சமவாய்ப்பினை உறுதி செய்தல் மற்றும் சுயமரியாதையுடன் வாழ்வதை உறுதிபடுத்துதல், அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை ஏற்படுத்துதல்,



ஆகியவற்றினை செயல்படுத்தும் வகையில் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு, மாநில அரசின் திட்டங்களை மட்டுமல்லாது, ஒன்றிய அரசின் திட்டங்களான மருத்துவ சான்றுடன் கூடிய அடையாள அட்டைகள் (UDID) வழங்குதல், பொதுக்கட்டடங்களில் தடையற்ற சூழல் அமைத்தலுக்கான "சுகம்ய பாரத் அபியான்" திட்டம், தேசிய கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம், தீனதயாள் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு திட்டம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மாநில அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை பாராட்டும் விதமாக ஒன்றிய அரசானது "சிறந்த மாநிலம்" என்ற தேசிய விருதினை 2021–ஆம் ஆண்டு டிசம்பர் 3–ஆம் நாளில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தில் வழங்கியது.

தமிழ்நாடு அரசின் இச்சாதனையானது, மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம்,

2016–னை முழுமையாக நிறைவேற்ற அரசு மேற்கொள்ளும் மகத்தான முயற்சியை வெளிப்படுத்துகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகளை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாகவும், அரசின் இதர துறைகளுடனும் ஒருங்கிணைந்து செயலாற்றி வழங்குகிறது. பல்வேறு துறைகளுக்கிடையேயான இந்த அணுகுமுறையை இத்துறை செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் வாயிலாக அறியலாம். பல்வேறு துறைகளின் சேவைகளை ஒருங்கிணைத்து மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்களை முறையாக செயல்படுத்துவது தமிழ்நாடு அரசின் கொள்கையாகும்.

தமிழ்நாடு அரசு, மாற்றுத் திறனாளிகளுக்கான சேவையினை மேலும் மேம்படுத்த, உலக வங்கியின் உதவியுடன், "உரிமைகள் திட்டம்" (RIGHTS PROJECT) என்ற திட்டத்தினை ரூ.1,702.00 கோடி நிதியில் செயல்படுத்த தொடங்கியுள்ளது. உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டமானது, தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையான,



மாற்றுத்திறனாளிகளை சமுதாயத்தில், "உள்ளடக்குதல், அணுகுதல், சமவாய்ப்புகளை அளித்தல்" ஆகிய கூறுகளின் மூலம் பல்வேறு துறைகளின் பணிகளை ஒருமுகப்படுத்தி செயல்படுத்தும் **மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில திட்டமாக** அமையும்.

இவ்வரசு, மேற்காணும் கொள்கைக்கு உட்பட்டு திட்டங்களை செயல்படுத்துவதுடன் கோவிட்–19 நோய்தொற்று பேரிடர் காலங்களில், தடுப்பு நடவடிக்கைகளாக மாற்றுத்திறனாளிகளுக்கு தடுப்பூசி வழங்கும் பணிகளை அவர்களுக்கு முன்னுரிமை அளித்து சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைத்தும், இல்லந்தேடி தடுப்பூசிகள் வழங்கியும் சிறப்பாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

மேலும், தரமான பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்குதலை கொள்கையாக கொண்டுள்ள இவ்வரசு, முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அனைத்துவகை மாற்றுத்திறனாளிகளும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் பயன்பெறும்

வகையில் கட்டணமில்லா சுகாதாரம் மற்றும் மறுவாழ்வு சேவைகளை தனித்துவமாக விரிவுபடுத்தியுள்ளது.

2007–ஆம் ஆண்டில் முதன்முறையாக ஏற்படுத்தப்பட்ட "தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்" மூலமாக மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறுக்கால பலன்கள், இயற்கை மற்றும் விபத்து கால மரணம் மற்றும் பேறுகாலம், பேறுகால குறைபாடு நிகழ்வின்போது இழப்பீடு வழங்குதல் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாரியம், தற்போது மேலும் சிறப்பாக செயல்பட மறுசீரமைக்கப்பட உள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் திட்டங்களை செயல்படுத்தும் இயக்குநராகவும், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–னை கண்காணிக்கும் மாநில ஆணையராகவும் செயல்பட்டு வருகிறார். இயக்குநரின் கட்டுப்பாட்டில் இணை இயக்குநர், இரண்டு துணை இயக்குநர்கள், மூன்று உதவி



இயக்குநர்கள், ஒரு நிர்வாக அதிகாரி, ஒரு கணக்கு அலுவலர், ஒரு உதவி தனி அலுவலர் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், 38 மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள், 22 சிறப்புப் பள்ளிகள், 50 உதவி பெறும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் 11 அரசு மறுவாழ்வு இல்லங்கள் ஆகியவற்றினையும் நிர்வகித்து, 70–க்கும் மேற்பட்ட நலத்திட்டங்களை ரூ.**838.01** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தி வருகிறார். மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–இன் அமலாக்கத்தை கண்காணிக்கவும் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் குறைகளை கேட்டு அதற்கு தீர்வு காணும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார். உலக வங்கியின் உதவியுடன் **"உரிமைகள்"** திட்டத்தை செயல்படுத்தும் திட்ட இயக்குநராகவும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் செயல்படுகிறார்.

## 2. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டமானது, 2016–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு, 2017–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19–ஆம் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சட்டமானது மாற்றுத்திறனாளிகளுக்கு தகவல் தொடர்பு, கலாச்சாரம், பொருளாதாரம், சுற்றுச்சூழல், நிறுவனம், அரசியல், சமூக மனப்பான்மை, கட்டமைப்பு காரணிகள் ஆகியவற்றில் உள்ள தடைகளை அகற்றுவதை நோக்கமாக கொண்டது. சமூகத்தில் மாற்றுத்திறனாளிகள் முழுமையாகவும் பயனுள்ளதாகவும் பங்கேற்க இச்சட்டமானது வழிவகை செய்கிறது.

இந்த புதிய சட்டத்தில் கை, கால் இயக்க குறைபாடுகள், பார்வைத்திறன் குறைபாடு, செவித்திறன் குறைபாடு, பேச்சு மற்றும் மொழி குறைபாடு, அறிவுசார் குறைபாடு, மனநோய், நரம்பியல், இரத்தக் கோளாறுகள் மற்றும் பல்வகை குறைபாடுகள் உள்ளிட்ட 21 குறிப்பிடத்தக்க மாற்றுத்திறன் வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன,



இச்சட்டத்தின் கீழ், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் நியமனத்துடன், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியம், மாற்றுத் திறனாளிகளுக்கான உகந்த பணியிடங்களை கண்டறியும் நிபுணர்கள் குழு ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்காக சம வாய்ப்புக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு நான்கு சதவீத இட ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற சூழலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இச்சட்டத்தின் கீழ், உருவாக்கப்பட்ட மாநில நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–னை திறம்பட செயல்படுத்துவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–**

1. தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் விதிகள், 2018 உருவாக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது, அதில், மாற்றுத்திறனாளிகளுக்கான ஆராய்ச்சி குழு அமைக்கப்பட்டு, அதன் செயல்பாட்டிற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளன.
2. மாற்றுத் திறனாளிகளுக்கு வரையறுக்கப்பட்ட பாதுகாவலரை நியமிப்பதற்கான விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.
3. மாற்றுத்திறனாளிகளுக்காக செயல்படும் நிறுவனங்களின் சேவையின் தரம், உள்ளுறையாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் இவ்விதிகளின் படி, நிறுவனங்களுக்கு பதிவு சான்று வழங்குவதற்கான அதிகாரமானது மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது.
4. மாற்றுத்திறனாளிகளுக்கு எளிதான மற்றும் சரியான மதிப்பீட்டின் படி



மருத்துவ சான்றிதழ் வழங்குவதற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் தொடர்புடைய மருத்துவ வசதிகள் கொண்ட அனைத்து மருத்துவமனைகளும் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.
5. இச்சட்டத்தினை நடைமுறைபடுத்தவும், திட்டங்களை செயல்படுத்தவும், மாவட்ட அளவில் கண்காணிக்கவும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகள் குழு அமைக்கப்பட்டுள்ளது.
6. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளிகள் நிறுவப்பட்டு அவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.
7. அரசு நிறுவனங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பதவியிடங்களைக் கண்டறிய அரசு ஒரு நிபுணர் குழுவை உருவாக்கியுள்ளது, மேலும், இக்குழுவானது தொகுதி 'A'

மற்றும் 'B' பிரிவில் 559 பதவியிடங்களை மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பதவியிடங்கள் என அடையாளம் கண்டுள்ளது. தொகுதி 'C' மற்றும் 'D' பிரிவில் உள்ள அனைத்துப் பதவியிடங்களும் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்ததாக கண்டறியப்பட்டுள்ளன. தொகுதி 'C' மற்றும் 'D' இல் உள்ள எந்தவொரு பதவிக்கும் இட ஒதுக்கீட்டில் இருந்து விலக்கு தேவைப்பட்டால், உரிய துறைகள், அரசிடமிருந்து விதிவிலக்குகளை பெற்றுக் கொள்ளலாம்.

2017–ஆம் ஆண்டு முதல் நான்கு சதவீத இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 1,345 மாற்றுத் திறனாளிகள் அரசு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

8. அனைத்து அரசு உயர் கல்வி நிறுவனங்களிலும், அரசு உதவி பெறும் மற்ற உயர்கல்வி நிறுவனங்களிலும்



மாணவர்கள் கல்வி பயில 40 சதவீதத்திற்கு மேல் அளவிடக்கூடிய மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவீத இட ஒதுக்கீடு வழங்க ஆணையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9. கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் இதர தேவைகளுக்கு மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் தேர்வு எழுத உதவுபவர், வாசிப்பாளர் மற்றும் ஆய்வக உதவியாளரின் உதவிகளை பெறும் வகையில், "தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளுக்கான தேர்வுகள் வழிகாட்டு நெறிமுறைகள் 2021" அரசாணை எண் 08, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள். 21.09.2021ல் வெளியிடப்பட்டுள்ளன.

10. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–இன் கீழ் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் குற்றங்களை விசாரித்து, விரைவான விசாரணையை உறுதி

செய்வதற்காக, முதன்மை நீதிபதியின் நீதிமன்றம், சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்றம், மற்றும் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு நீதித்துறை மாவட்டத்திலும் முதன்மை மாவட்ட நீதிமன்றம் / மாவட்ட நீதிமன்றங்களை சிறப்பு நீதிமன்றங்களாக அரசு நியமித்துள்ளது. தற்போதுள்ள அனைத்து சிறப்பு அரசு வழக்கறிஞர்களையும் (மனித உரிமைகள்) நீதிமன்றத்தில் இந்த சட்டத்தின் கீழ் வழக்குகளை கையாள்வதற்காக சிறப்பு அரசு வழக்கறிஞர்களாக அரசு நியமித்துள்ளது.

11. மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களை கண்டறிய மற்றும் பணியிடத்தில் தடையற்ற சூழலை ஏற்படுத்த ஏதுவாக அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் சமவாய்ப்பு கொள்கையினை வெளியிட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.



12. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்காக உருவாக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதை கண்காணிக்க, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், அவருக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–இன் பிரிவு 82–ன் கீழ் வரும் மாற்றுத் திறனாளிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு, தீர்வு காண இந்திய உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908–ன் படி உரிமையியல் நீதிமன்றத்திற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 3. மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழும் அடையாள அட்டையும்

மாற்றுத்திறனாளிகளுக்கு எளிதான மற்றும் சரியான மதிப்பீட்டின் படி மருத்துவ சான்றிதழ் வழங்குவதற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும்

தொடர்புடைய மருத்துவ வசதிகள் கொண்ட அனைத்து மருத்துவமனைகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட நாளன்று மருத்துவக்குழு மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் இத்துறை உருவாக்கப்பட்டதிலிருந்து இதுவரை 14,27,202 மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் (NIDC) வழங்கப்பட்டுள்ளன.

**மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID)**

மாற்றுத்திறனாளிகளின் விவரங்கள் அடங்கிய தரவு தளத்தை உருவாக்க மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இந்த அட்டையானது மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் பல்வேறு திட்டங்கள், சேவைகள், உதவிகளை எளிதில் வழங்கவும், அரசாங்கத்தின் அனைத்து



நிலைகளிலும் உள்ள பயனாளிகளின் முன்னேற்றத்தை நெறிப்படுத்தவும், கண்காணிக்கவும் உதவும்.

4. **நிறுவனங்களுக்கான பதிவு மற்றும் அங்கீகாரம்**

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 பிரிவு 50–ன் படி, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், மாற்றுத்திறனாளிகளுக்காக செயல்படும் நிறுவனங்களுக்கு பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்கான அதிகாரம் படைத்தவர் ஆவார். மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–இன் கீழ் இதுவரை 439 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இதுவரை 290 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்கு முறை சட்டம், 1973 மற்றும் விதிகள், 1974–இன் கீழ், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 4.1. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மனநல மறுவாழ்வு மையங்களுக்கான பதிவு

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரால் இதுவரை 85 மனநல மறுவாழ்வு மையங்களுக்கான பதிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 5. மாநில அரசின் திட்டங்கள்

### 5.1. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சேவைகள்

### 5.1.1. செவித்திறன் குறைபாடு

செவித்திறன் குறைபாட்டினை மதிப்பீடு செய்வதற்கு 28 மாவட்டங்களில் செவித்திறன் குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மையங்களில், தேவையான கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டு, பரிசோதனைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, இதுவரை 25,029 மாற்றுத்திறனாளிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள், காக்லியர் உள்வைப்பு அறுவை சிகிச்சைக்கான உதவிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.



### 5.1.2. பச்சிளங் குழந்தைகளுக்கான காது கேளாமையை கண்டறியும் திட்டம்

பச்சிளங் குழந்தைகளின் செவித்திறன் குறைப்பாட்டினைக் கண்டறியும் பரிசோதனைத் திட்டம், சென்னை, சிவகங்கை மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டது. சென்னை மாவட்டத்தில் உள்ள 11 மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாவட்டத் தலைமையகம் / வட்டார / தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள 10 மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறவி காது கேளாத தன்மை உள்ளதா என்பதை முன்கூட்டியே பரிசோதனை செய்யப்பட்டு கண்டறியப்பட்டு வருகிறது. 2021–2022–ஆம் ஆண்டில், 28,111 குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட்டு, 26 செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகள் கண்டறியப்பட்டு மேல்சிகிச்சை மற்றும் வேறு சில பரிசோதனைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

### 5.1.3. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள்

6 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ஆரம்ப நிலை பயிற்சி அளிப்பதற்காக மாவட்ட அளவில், ஆறு வெவ்வேறு வகையான மாற்றுத்திறனாளிகளுக்கான 92 ஆரம்ப கால பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசை பயிற்சியாளர்களுக்கு, மாதம் ரூ.14,000/- மதிப்பூதியமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2022-2023-ஆம் நிதி ஆண்டில், இம்மதிப்பூதியமானது ரூ.18,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இம்மையங்களில், ஆரம்ப கால பயிற்சி மைய குழந்தைகளுக்குப் பயிற்சியளித்து, அவர்களை மற்ற மாணவர்கள் பயிலும் பள்ளிகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



ஆரம்பகால பயிற்சி மையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| ஆரம்ப கால பயிற்சி மையங்கள் | மையத்தின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | சிறப்பு ஆசிரியர்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு 2022-2023 (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|
| காது கேளாதோருக்கான ஆரம்ப கால பயிற்சி மையம் | 33 | 660 | 63 | 114.64 |
| மன வளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்ப கால பயிற்சி மையம் | 31 | 1460 | 140 | 286.44 |
| பார்வைத் திறன் குறைபாடுடையோருக்கான ஆரம்ப கால பயிற்சி மையம் | 6 | 98 | 12 | 24.60 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூளை முடக்கு வாதம் உள்ளோருக்கான ஆரம்ப கால பயிற்சி மையம் | 2 | 74 | 7 | 13.38 |
| புற உலக சிந்தனை யற்றோருக்கான ஆரம்ப கால பயிற்சி மையம் | 19 | 436 | 80 | 175.98 |
| பல்வகை மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம், மண்டல வள மற்றும் பயிற்சி மையம் திருச்சிராப்பள்ளி | 1 | 18 | 2 | 3.84 |
| மொத்தம் | 92 | 2746 | 304 | 618.88 |



**5.1.4. குழந்தைகளின் தாமத வளர்ச்சியை வீட்டிற்கே சென்று கண்டறிவதற்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம்**

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சியில் தாமதம் ஏற்படுகிறதா என்பதனை பரிசோதித்து அடையாளம் காணும் திட்டம் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் அமர் சேவா சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வளர்ச்சியில் தாமதம் உள்ள குழந்தைக்கு வீட்டிற்கே சென்று சிகிச்சை மற்றும் பயிற்சி வழங்கும் திட்டம் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 23 தொகுதிகளில் ரூ.236.92 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு, மொத்தம் 2,461 குழந்தைகள் இத்திட்டம் மூலம் பயனடைந்துள்ளனர்.

**5.1.5. ஆரம்ப நிலை பயிற்சி மைய குழந்தைகளுக்கான இணை உணவு மற்றும் சத்துணவு வழங்கும் திட்டம்**

ஆரம்ப நிலை பயிற்சி மையத்தில் பயிலும் குழந்தைகளுக்கு, அங்கன்வாடி

மையங்களிலிருந்து ஊட்டச்சத்து உணவுகள் வழங்கப்படுகின்றன. அங்கன்வாடி மையத்திலிருந்து ஆரம்பகால பயிற்சி மையங்களுக்கு உணவைக் கொண்டு வருவதற்கு, ஏதுவாக இத்திட்டத்தினை செயல்படுத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு, இத்துறை போக்குவரத்துக் கட்டணங்களை வழங்குகிறது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.3.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.1.6. ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயின்று வரும் குழந்தைகள், பராமரிப்பாளர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களுக்கான ஒருநாள் சுற்றுலா திட்டம்**

ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயின்று வரும் குழந்தைகள் வெளியுலகைக் காண்பதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் சிறப்பாசிரியர்கள், பெற்றோர் / ஆரம்ப நிலை பயிற்சி மையத்தின் பராமரிப்பாளர்களுக்கு ஒருநாள் சுற்றுலா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



கோவிட்–19 தொற்று நோய் சூழ்நிலையின் போது, 2020–2021–ஆம் ஆண்டு மற்றும் 2021–2022–ஆம் ஆண்டுகளில் இச்சுற்றுலா ஏற்பாடு செய்யப்படவில்லை.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.7.9 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.1.7. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள்**

மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் மாவட்ட தலைமையகங்களில் அமைந்துள்ளதால், இம்மையங்களுக்கு சென்று சேவைகளைப் பெறுவது ஆறு வயதுக்குட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோருக்கு கடினமாக உள்ளது. எனவே, 38 நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பகால பயிற்சி மையத்தின் சேவைகளை வழங்கும் பொருட்டு அனைத்து சிகிச்சை உபகரணங்களும் நடமாடும் சிகிச்சை பிரிவில் ஏற்படுத்தப்பட்டு,

பயனாளிகளின் வீட்டிற்கே சென்று சேவைகள் வழங்கப்படுகின்றன. தேவைப்படும் கிராமங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. தசைப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, சிறப்புக் கல்வி மற்றும் இதர மறுவாழ்வுப் பணிகளுடன் இதுவரை 15,391 முகாம்கள் நடத்தப்பட்டு 1,17,076 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். 2021–2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.190.15 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.254.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது..

### 5.1.8. மீட்புத் திட்டம்

குடும்பத்தால் கைவிடப்பட்ட, தெருக்கள் மற்றும் பிற பொது இடங்களில் சுற்றித் திரியும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு சாரா அமைப்புகள் மூலம் மீட்புத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அவ்வாறு மீட்கப்பட்டவர்கள் முதலில் மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மறுவாழ்வு இல்லத்திற்கு மாற்றப்படுகின்றனர். மீட்கும் பணியினை மேற்கொள்ளும் அரசு சாரா அமைப்புகளுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.1,500/– வழங்கப்படுகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.7.48 இலட்சம் செலவில் 499 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.1.9. 14 வயதிற்கு மேற்பட்ட அறிவுசார் குறைபாடுடையோருக்கான மறுவாழ்வு இல்லங்கள்

மாநிலம் முழுவதும் 14 வயதிற்கு மேற்பட்ட அறிவுசார் குறைபாடுடையோருக்கு 65 இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆண்களுக்கான 16 இல்லங்கள், பெண்களுக்கான 9 இல்லங்கள், இரு பாலினத்தவருக்கான 40 இல்லங்கள் உட்பட

மொத்தம் 65 இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் சமூக சேவகர், விடுதி காப்பாளர், சமையலர், உதவி சமையலர், இரவு காவலர், இரண்டு தொழிற் பயிற்சியாளர்கள், சுகாதார பணியாளர் ஆகியோர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வில்லங்கள் அனைத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இங்கு உள்ளுறையாளர்களுக்கு தங்குமிடம், உணவு, மருத்துவ வசதிகள் வழங்குவதுடன், மெழுகுவர்த்தி தயாரித்தல், அடுமனை மற்றும் தோட்டக் கலை போன்ற தொழில்களில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2021–2022 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூ.723.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.774.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 5.1.10. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

மனநலம் பாதிக்கபட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்களில் உள்ளவர்களுக்கு மருத்துவ சிகிச்சை, இலவச தங்குமிடம் ஆகிய வசதிகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட மனநல மருத்துவர் மூலம் மாதம் ஒரு முறை இந்த இல்லங்களுக்கு சென்று, மனநல மதிப்பீட்டின் அடிப்படையில் அவர்களுக்கு தேவையான சிகிச்சையும், தேவைப்படுவோருக்கு உரிய சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது. 98 மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்களில் 6,415 உள்ளுறையாளர்கள் உள்ளனர். இதில் 53 இல்லங்கள் அரசிடம் இருந்து நிதியுதவி பெறுகின்றன, மீதமுள்ள 45 இல்லங்கள் சுயநிதி இல்லங்களாக செயல்படுகின்றன. இந்த இல்லங்களுக்கு உணவு மானியமாக நபர் ஒருவருக்கு மாதம் ரூ.900 அரசால் வழங்கப்படுகிறது. 4,334 உள்ளுறையாளர்களுக்கு ஆதார் எண் வழங்கப்பட்டு, மீதமுள்ள நபர்களுக்கான பதிவு நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.643.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.1.11. இடைநிலை பராமரிப்பு மையங்கள்

மனநலம் பாதிக்கப்பட்டு குணமடைந்து குடும்பத்தினரால் கைவிடப்பட்டவர்களுக்காக இடைநிலை பராமரிப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவர்களை சிகிச்சைக்கு பின், குடும்பம் மற்றும் சமுதாயத்துடன் ஒருங்கிணைக்க ஏதுவாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மதுரை, இராமநாதபுரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில், 700 பயனாளிகள் தங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த இல்லங்களில் இன்றைய நிலவரப்படி 128 பயனாளிகள் தங்கியுள்ளனர்.



### 5.1.12. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அரசு மறுவாழ்வு இல்லங்கள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:–

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | பரனூர் | செங்கல்பட்டு |
| 2. | உளுந்தூர் பேட்டை | கள்ளக்குறிச்சி |
| 3. | பர்கூர் | கிருஷ்ணகிரி |
| 4. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 5. | மனையேறிப்பட்டி | தஞ்சாவூர் |
| 6. | யா. புதுப்பட்டி | மதுரை |
| 7. | மல்லவாடி | திருவண்ணாமலை |
| 8. | செல்லியம்பட்டி | தர்மபுரி |
| 9. | தேவியாக்குறிச்சி | சேலம் |
| 10. | விண்ணப்பள்ளி | ஈரோடு |

இந்த இல்லங்களில் 614 உள்ளுறையாளர்கள் தங்கி பயன்பெற்று வருகின்றனர்.

சமூக இழிவை எதிர்கொள்ளும் மற்றும் குடும்பத்தால் கைவிடப்பட்ட தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்ட நபரும் தாங்களாகவே முன்வந்து இந்த இல்லங்களில் அனுமதிகோரும் பட்சத்தில் அனுமதிக்கப்படுவார்கள்.

பொது இடங்களில் இரவல் கேட்கும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட, இரவலர்கள் உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வில்லங்களில் தங்கியுள்ள ஒவ்வொரு உள்ளுறையாளர்களுக்கும் இலவச உறைவிடம், ஒவ்வொரு ஆண்டும் இரண்டு இணை ஆடைகள், மருத்துவ வசதிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. MCR காலணிகள், செயற்கை அவயங்கள் மற்றும் கண்ணாடிகளும் வழங்கப்படுகின்றன. உள்ளுறையாளர்கள்



இறக்கும் பட்சத்தில் ஈமச்சடங்கு செய்வதற்காக ரூ.2000/- அரசால் வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.107.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 - 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.103.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.1.13. இரவலர்கள் முகாம் – மேல்பாக்கம்

தமிழ்நாடு பிச்சை எடுப்பதை தடுக்கும் சட்டம், 1945-இன் கீழ் பிச்சை எடுப்பது குற்றமாகும். நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட இரவலர்களை தண்டனைக்காலத்தில் தங்க வைப்பதற்காக அரசு பராமரிப்பு முகாம் செயல்பட்டு வருகிறது. 2016-ஆம் ஆண்டு முதல் தண்டிக்கப்பட்ட நபர் எவரும் இல்லை என்பதால், தற்போது இம்முகாமில் இல்லவாசிகள் எவரும் இல்லை.

**5.1.14. அறிவுசார் குறைபாடுடைய குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள்**

தேனி மாவட்டத்தில், 90 குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அறிவுசார் குறைபாடுடைய குழந்தைகளுக்கான 3 பகல்நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இம்மையங்களில் இரண்டு சிறப்பு ஆசிரியர்கள் / சிகிச்சையாளர், பராமரிப்பு உதவியாளர், துப்புரவு பணியாளர் ஆகியோர் உள்ளனர். சிறப்பாசிரியர்களுக்கு மாதாந்தோறும் ரூ.14,000/– மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. மேலும், 2022–2023– ஆம் நிதி ஆண்டில் இந்த மதிப்பூதியமானது ரூ.18,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை 2021–2022–ஆம் ஆண்டில் ரூ.14.52 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



இத்திட்டத்திற்காக, 2022–2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், ரூ.14.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.1.15. தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள்**

திருநெல்வேலி, சென்னை, வேலூர், மதுரை, சேலம், திருவண்ணாமலை, திண்டுக்கல், விருதுநகர், தஞ்சாவூர், தூத்துக்குடி, விழுப்புரம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய 14 மாவட்டங்களில் இந்த மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த பகல் நேர பராமரிப்பு மையங்கள் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. தசைகளில் அதிகரிக்கும் பலவீனத்தை தடுக்க தசை பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு தசை பயிற்சி மற்றும் அடிப்படை மருத்துவ பரிசோதனைகள் வழங்கப்படுகின்றன.

2021–2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் 360 பயனாளிகள் பயன்பெற ரூ.161.81 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.161.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.1.16. மாநில வள மற்றும் பயிற்சி மையம் – சென்னை

2005–ஆம் ஆண்டு முதல் சென்னையில் மாநில வள மற்றும் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அரசால் நடத்தப்படுகிறது. இங்கு மாற்றுத்திறனாளிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் வழங்கப்படுகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ்கள், UDID அட்டைகள் பதிவு புத்தகம் வழங்குதல், பயணச் சலுகை, மாற்றுத்திறனாளிகளுக்கான வருமான வரிச்சலுகை சான்றிதழ், தேர்வு எழுத உதவியாளர் நியமனம், தேர்வின் போது கூடுதல் நேரத்திற்கான



சலுகை சான்றிதழ் ஆகியவை இம்மையத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. இம்மையத்தில், ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்கள் பற்றிய தகவல்கள் வழங்கப்படுகின்றன. இம்மையத்தில், பல்வேறு வகையான குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கான தொடக்ககால பயிற்சி மையம் செயல்படுகிறது. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான பகல்நேர பராமரிப்பு மையத்தில் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2021–2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 35.66 இலட்சம் மதிப்பீட்டில் 9,122 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.35.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.1.17. மண்டல வள மற்றும் பயிற்சி மையம் திருச்சிராப்பள்ளி

தென் மாவட்டங்களைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக, திருச்சிராப்பள்ளியில் முதல் மண்டல வள மற்றும்

பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு தகவல் மையம், ஆரம்பகால பயிற்சி மையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்தி அதன் மூலம் மறுவாழ்வு அளிக்கும் வகையில் பகல்நேர பராமரிப்பு மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அரசால் நடத்தப்படுகிறது. இம்மையத்தில் மாற்றுத்திறனாளி என்பதற்கான மருத்துவ சான்றிதழ்கள் மற்றும் பதிவு புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. 2021-2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 22.07 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 - 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.22.07 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 5.2. சிறப்புக் கல்வி

### 5.2.1. சிறப்புப் பள்ளிகள்

மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர்கள் கல்வி பெறும் வகையில் அவர்களின் தேவைக்கேற்ப சிறப்புபள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 22 அரசு சிறப்பு பள்ளிகளில் ஐந்து மேல்நிலைப்பள்ளிகள், (செவித்திறன் குறைபாடுடையோருக்கான இரண்டு பள்ளிகள், பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான மூன்று பள்ளிகள்), ஐந்து செவித்திறன் குறைபாடுடையோருக்கான உயர்நிலைப் பள்ளிகள், ஏழு நடுநிலைப் பள்ளிகள் (மூன்று செவித்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள், மூன்று பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள், ஒரு இயக்கத்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளி), நான்கு பார்வைத்திறன் குறைபாடுயோருக்கான ஆரம்ப பள்ளிகள், ஒரு அறிவுசார் குறைபாடுடையோருக்கான ஆரம்ப பள்ளி ஆகியவை அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் மொத்தம் 1,053 மாணவ

மாணவியர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். மேலும் 50 அரசு உதவி பெறும் சிறப்புபள்ளிகளில் 20 மேல்நிலைப்பள்ளிகள் (12 செவித்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள், நான்கு பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள், நான்கு இயக்கத்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள்) ஏழு உயர்நிலை பள்ளிகள் (ஐந்து செவித்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள், இரண்டு பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள்) ஆறு நடுநிலைப்பள்ளிகள் (ஒரு செவித்திறன் குறையுடையோருக்கான பள்ளி, மூன்று பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள், இரண்டு இயக்கத்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள்), மூன்று ஆரம்ப பள்ளிகள் (ஒரு செவித்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளி, இரண்டு பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள்) மற்றும் 14 அறிவுசார் குறைபாடுடையோருக்கான பள்ளிகளில் மொத்தம் 4,081 மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகிறார்கள்.



இச்சிறப்பு பள்ளிகள் தவிர்த்து, 305 அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் அறிவுசார் குறைபாடுடையோருக்கான சிறப்பு பள்ளிகளில் 6,935 மாணவ மாணவியர்கள் சிறப்புக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி பெறுகிறார்கள்.

இச்சிறப்பு பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச உணவு, தங்குமிடம் ஆகிய வசதிகள் வழங்கப்படுகின்றன. இச்சிறப்புப்பள்ளிகளில், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் ஆண்டிற்கு ஒரு முறை இக்குழந்தைகள் கல்விச் சுற்றுலா செல்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2.2. கல்வி உதவித்தொகை

தொடக்க கல்வி முதல் கல்லூரி கல்வி வரை பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசால் ஆண்டு தோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:–

| வ.எண். | வகுப்பு | உதவித்தொகை (வருடத்திற்கு) |
|---|---|---|
| 1. | 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை | ரூ. 1,000/– |
| 2. | 6 முதல் 8–ஆம் வகுப்பு வரை | ரூ. 3,000/– |
| 3. | 9 முதல் 12–ஆம் வகுப்பு வரை | ரூ. 4,000/– |
| 4. | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ. 6,000/– |
| 5. | தொழில் படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்பு | ரூ. 7,000/– |

2021–2022 நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 698.87 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 23,326 மாணவ மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 680.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 5.2.3. வாசிப்பாளர் உதவித்தொகை

பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்கு கற்றலை எளிதாக்க, ஒன்பதாம் வகுப்பு முதல் முதுகலை பட்டப்படிப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு வாசிப்பாளர் உதவித்தொகை அரசால் கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது:–

| வ.எண். | வகுப்பு | உதவித்தொகை (வருடத்திற்கு) |
|---|---|---|
| 1. | 9 ஆம் முதல் 12 ஆம் வகுப்பு வரை | ரூ. 3,000/– |
| 2. | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ. 5,000/– |
| 3. | தொழில் படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்பு | ரூ. 6,000/– |

2021–2022–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.81.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,947 மாணவ மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில்

ரூ. 100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2.4. தேர்வு எழுத உதவுவோருக்கான உதவித்தொகை**

9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்கள் தேர்வு எழுத வசதியாக, அரசால் ஒவ்வொரு தேர்வுக்கும் ஒரு உதவி எழுத்தாளருக்கு, தாள் ஒன்றுக்கு ரூ.300/– வீதம் வழங்கப்படுகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 10 அரசு சிறப்புப்பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் சிறப்புப்பள்ளிகளில் பயிலும் 585 மாணவர்களுக்கு ரூ.24.68 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.44.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**5.2.5. மாணவர்களின் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகை**

மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர்கள் பள்ளிக் கல்வியை இடை நிற்காமல் தொடர ஊக்குவிக்கும் வகையில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.1500/– முதல் ரூ.2000/– வரை ரொக்க ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையானது தமிழ்நாடு மின் நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தில் நிதி வைப்பு செய்யப்பட்டு மாணவர்களின் வங்கிக் கணக்கில் 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பிறகு மாணவர்களுக்கு வட்டியுடன் வழங்கப்படுகிறது.

| வ.எண். | வகுப்பு | ரொக்க ஊக்கத்தொகை (வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | 10 ஆம் வகுப்பு | ரூ.1,500/– |
| 2 | 11 ஆம் வகுப்பு | ரூ.1,500/– |
| 3 | 12 ஆம் வகுப்பு | ரூ.2,000/– |

2021–2022 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் 1,461 மாணவர்களுக்கு ரூ.24.05 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.24.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2.6. அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளுக்கு நிதியுதவி

தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்பு பள்ளிகளில் பணிபுரியும் இரண்டு சிறப்பாசிரியர்கள், ஒரு தசைப் பயிற்சியாளருக்கு மாதத்திற்கு ரூ.14,000/– ஊதிய மானியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 2022 – 2023 ஆம் நிதியாண்டு முதல் ஊதிய மானியமானது ரூ.18,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இந்நிறுவனங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல் / 



கட்டட விரிவாக்கம் செய்தல், வாடகை மானியம் ஆகிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சிறப்பு பள்ளிகளின் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு உணவூட்டு மானியத் தொகையாக மாதம் ரூ.900/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மனவளர்ச்சி குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு வாடகை மானியமாக ஆண்டிற்கு ரூ.1,20,000/– மற்றும் கட்டட விரிவாக்கத்திற்கு ரூ.5.00 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

2021–2022 ஆம் நிதியாண்டில் 38 செவித்திறன் குறைபாடுடையோருக்காக நடத்தப்படும் சிறப்புப்பள்ளிகளில் பணிபுரியும் 110 சிறப்பாசிரியர்களுக்கு ரூ.184.80 இலட்சமும்,

ஏழு பார்வைத்திறன் குறைபாடுடையோருக்காக நடத்தப்படும் சிறப்புப்பள்ளிகளில் பணிபுரியும் 21 சிறப்பாசிரியர்களுக்கு ரூ.35.28 இலட்சமும் ஊதிய மானியமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், 266 மனவளர்ச்சி குன்றிய மாணாக்கர்களுக்காக நடத்தப்படும் சிறப்புப்பள்ளிகளில் பணிபுரியும் 783 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ரூ.1315.44 இலட்சம் ஊதிய மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2021–2022 ஆம் நிதியாண்டில் சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் 5,981 மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு உணவூட்டு மானியத் தொகையாக மாதம் ரூ.900/– வீதம் ரூ.412.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.3,499.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2.7. சட்டம் பயின்ற பட்டதாரி மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை**

வழக்குரைஞர் மன்றத்தில் பதிவு செய்த மாற்றுத்திறனாளிகளுக்கு சட்டப் புத்தகங்கள் வாங்கவும், இதர செலவினங்களுக்காகவும் ரூ.50,000/– உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2021 – 2022 ஆம் நிதியாண்டில் 20 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகையாக ரூ.50,000/– வீதம் ரூ.10.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2.8. சீருடைகள்

அரசு சிறப்புப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு ஆண்டுதோறும் நான்கு இணை கட்டணமின்றி சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. 2021 – 2022 ஆம் நிதியாண்டில் கல்வி பயின்ற 1,178 மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு நான்கு இணை இலவச சீருடைகள் ரூ.11.91 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.11.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 5.2.9. மின்னணு உதவி உபகரணங்கள்

#### 5.2.9.(அ). மின்னணு பிரெய்லி உபகரணங்கள்

பார்வைத்திறன் குறைபாடுடைய கல்லூரி மாணாக்கர்கள் எளிதாக கல்வி பயில்வதற்கு ஏதுவாக உயர் தொழில்நுட்பம் கொண்ட மின்னணு ப்ரெய்லி வடிவிலான பாடப்புத்தகங்களை தொடு உணர்வுடன் எளிமையான முறையில் கல்வி கற்க 'மின்னணு ப்ரெய்லி ரீடர்' எனும் உதவி உபகரணம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவி உபகரணமானது 2021–2022–ஆம் நிதியாண்டில் 204 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.142.03 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2.9.(ஆ). ஆவாஸ் மென்பொருளுடன் கூடிய கையடக்க கருவி**

அறிவுத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அவர்களின் கற்றல் திறனையும், தகவல் தொடர்பு திறனையும் மேம்படுத்தும் பொருட்டு மாற்று வழியில் தொடர்பு கொள்ள ஏதுவாக AVAZ எனும் மென்பொருள் பதிவேற்றம் செய்த கையடக்க கருவி வழங்கப்பட்டு வருகிறது. 2021–2022 ஆம் நிதியாண்டில் 497 மாணாக்கர்களுக்கு இந்த மென்பொருள் சாதனம் ரூ120.24 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.123.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**5.2.9.(இ). ஏஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்**

அரசு பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான சிறப்புப்பள்ளிகளில் 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்குப், பாடங்களை படித்துப் பதிவு செய்து எளிதாக கல்வி கற்க உதவும் வகையில் 'ஏஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' எனும் உதவி உபகரணம் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது. 2021 –2022 ஆம் நிதியாண்டில் 132 பயனாளிகளுக்கு ரூ.11.91 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.13.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.2.10.செவித்திறன் குறைபாடுடையோருக்கான திறன் வகுப்புகள்

செவித்திறன் குறைபாடுடையோருக்காக செயல்படும் ஒன்பது அரசு சிறப்புப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் கற்றலை எளிதாக்குவதற்கு கணினித் தளவாடங்கள், நவீன கட்டமைப்பு வசதிகள் கொண்ட திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2021–2022–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தில் வகுப்பறை பராமரிப்புக்காக ரூ.2.71 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.2.71 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 5.2.11. பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான திறன் வகுப்புகள்

பார்வைத்திறன் குறைபாடுடையோருக்காக செயல்படும் 10 அரசு சிறப்புப்பள்ளிகள் மற்றும் சமக்ர சிக்க்ஷா அபியான் திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் கற்றலை எளிதாக்குவதற்கும் பிரெய்லி முறையில் கற்க கணினித் தளவாடங்கள், நவீன கட்டமைப்பு வசதிகள் கொண்ட திறன் வகுப்பறைகள் ஆகியவை அமைக்க தேவையான உபகரணங்கள் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2021 – 2022 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தில் கீழ் நவீன வசதிகொண்ட திறன் வகுப்பறை அமைக்க ரூ.49.24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 48.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2.12. கணினி ஆய்வகங்கள் மற்றும் கணினி பயிற்றுவிப்பாளர்களுக்கான தொகுப்பூதியம்**

செவித்திறன் / பார்வைத்திறன் / கை, கால் இயக்கத்திறன் குறைபாடுடையோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு கணினி பயிற்சி வழங்குவதற்கு ஏதுவாக கணினி ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் கணினி பயிற்றுநர்களுக்கு மாதம் ரூ.15,000/- வீதம் தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 2021 – 2022 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தில் கணினி பயிற்றுநர்களுக்கு ரூ.25.48 இலட்சம் தொகுப்பூதியத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.34.59 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**5.2.13. செவித்திறன் மற்றும் பேச்சு திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு**

மேல்நிலைக் கல்வி முடித்த செவித்திறன் குறைபாடுடைய மாணாக்கர்கள் உயர்கல்வி பயில்வதற்கு ஏதுவாக சென்னை மாநிலக் கல்லூரியில் பி.காம் மற்றும் பி.சி.ஏ சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பாடப்பிரிவிலும் அதிக பட்சமாக 30 மாணாக்கர்களுடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் செவித்திறன் குறைபாடுடைய மாணாக்கர்களுக்கு கல்வி கற்பிக்கும் மூன்று கௌரவ விரிவுரையாளர்களுக்கு தலா மாதம் ரூ.15,000/- தொகுப்பூதியமும், ஒரு கணினி ஆய்வக தொழில்நுட்பாளருக்கு மாதம் ரூ.6,000/- தொகுப்பூதியமும் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2021 – 2022 ஆம்

நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் விரிவுரையாளர் மற்றும் கணினி பயிற்றுநருக்கு ரூ.6.37 இலட்சம் செலவில் தொகுப்பூதியத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.16.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2.14. இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா – கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (RKMVERI), கோயம்புத்தூர்

கோயம்புத்தூர், இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா–கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தில் செவித்திறன், பார்வைத்திறன், உடல் இயக்கத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு பயிற்சி வகுப்புகள் [Disability Management and Special Education (DMSE) மற்றும் General & Adapted Physical Education and Yoga (GAPEY)] நடத்துவதற்காக 21 விரிவுரையாளர்களுக்கு 2021 – 2022 ஆம் நிதி ஆண்டில் மானியத்தொகை ரூ.227.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்தில் ரூ.455.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.3. மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள்

மாற்றுத்திறனாளிகள் தடையின்றி சுயமாக வாழ உதவும் வகையில் 24 வகையான உதவி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள தகுதிவாய்ந்த 9,185 மாற்றுத்திறனாளிகள் உட்பட மொத்தம் 37,660 பயனாளிகளுக்கு ரூ.7075.56 இலட்சம் செலவில்

உதவி உபகரணங்கள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன:–

| வ. எண் | உதவி உபகரணங்கள் | மொத்த எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1. | துணை ஊன்றுகோல் (Auxiliary crutches) | 1,228 | ரூ.8,18,940 |
| 2. | முழங்கை ஊன்றுகோல் (Elbow crutches) | 1,372 | ரூ.8,18,980 |
| 3. | உருப்பெருக்கி (Magnifier) | 253 | ரூ.19,82,694 |
| 4. | பிரெய்ல் கைக் கடிகாரம் (Braille Watches) | 1,394 | ரூ.18,41,036 |
| 5. | கருப்புக் கண்ணாடிகள் (Goggles) | 2,856 | ரூ.3,99,840 |
| 6. | ஒளிரும் மடக்குக் குச்சிகள் (Reflective folding sticks) | 2,105 | ரூ.9,99,875 |
| 7. | நடைப்பயிற்சி உபகரணம் (Walking device) | 1,110 | ரூ.19,97,060 |
| 8. | மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி (Wheel chair for Cerebral Palsy affected persons) | 738 | ரூ.61,92,150 |
| 9. | நேரடியாக பிறருடன் பேசி தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள அறிவுசார் குறைபாடுடைய, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் மாற்று வழியில் தொடர்புகொள்ள ஏதுவாக உருவாக்கப்பட்ட மென்பொருளுடன் கூடிய உபகரணம் (Alternative and Augmentative communication device with AVAZ software) | 497 | ரூ.1,23,17,280 |

| | | | |
|---|---|---|---|
| 10. | இணைப்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் (Retrofitted Petrol scooter for Differently Abled Persons & Specially designed Retrofitted Petrol scooter for spinal cord affected persons) | 4,901 | ரூ.39,45,30,000 |
| 11. | பார்வைத்திறன் குறையுடையோர் மற்றும் செவித்திறன் குறையுடையோருக்கான திறன்பேசிகள் | 8,704 | ரூ.10,88,00,000 |



| | | | |
|---|---|---|---|
| | (Smart Phone for Hearing and Visually impaired persons) | | |
| 12. | பார்வைத்திறன் குறையுடைய மாணவர்கள் பாடங்களை பதிவு செய்து படிப்பதற்கான உபகரணம் (Angel pro daisy player) | 132 | ரூ.11,91,960 |
| 13. | மூளைமுடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு நாற்காலிகள் (Corner Seat for children with cerebral palsy) | 183 | ரூ.9,98,100 |
| 14. | நெகிழி மூடநீக்கு சாதனம் (Plastic Caliper) | 109 | ரூ.6,30,500 |
| 15. | உலோக மூடநீக்கு சாதனம் (Metal Caliper) | 25 | ரூ.2,37,500 |
| 16. | செயற்கை அவயம் (Artificial limbs) | 72 | ரூ.6,16,750 |

| | | | |
|---|---|---|---|
| 17. | மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி (Battery Operated Wheel Chair) | 1,156 | ரூ.11,88,63,515 |
| 18. | மூன்று சக்கர வண்டி (Tricycle) | 790 | ரூ.66,93,360 |
| 19. | மடக்கு சக்கர நாற்காலி (Foldable Wheel Chair) | 823 | ரூ.59,91,360 |
| 20. | மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் (Motorised Sewing Machine) | 2,141 | ரூ.1,46,44,440 |
| 21. | காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக்கருவிகள் (Behind the Ear Hearing Aid) | 6,867 | ரூ.1,99,99,320 |
| 22. | மின்னணு வடிவில் உள்ள புத்தகங்களை பிரெய்லி எழுத்துக்கள் வடிவில் தொடு உணர்வுடன் அறிய உதவும் | 204 | ரூ.69,91,488 |



| | | | |
|---|---|---|---|
| | வாசிக்கும் கருவி (Electronic Braille Reader) | | |
| | | **37,660** | **ரூ.70,75,56,148** |

கோவிட்–19 தொற்றுநோய் காரணமாக, நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கும் திட்டமானது, உபகரணத் தயாரிப்பாளரால் தயாரித்து வழங்க இயலவில்லை. மேலும், நவீன செயற்கை அவயம் உபகரணமானது முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

### 5.3.1. மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களின் மாதிரிகளை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறை

மாற்றுத்திறனாளிகள் பல்வேறு தரப்பட்ட மாதிரி உபகரணங்களில் தங்களுக்கு தேவையான உபகரணத்தினை தாங்களே தேர்வு செய்து பயன்பெறும் வகையில், ஐந்து வகையான உதவி உபகரணங்கள் வழங்கும் முறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இம்முறையில், மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் பொதுவான வகையில் அதிகபட்ச வசதிகளுடன் கூடிய உதவி உபகரணங்களை தொழில்நுட்பக் குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டதன் அடிப்படையில், அறுதியிட்ட வகை உபகரணமாக (Assured Model) வழங்கப்படுகிறது. அறுதியிட்டவகை உபகரணங்கள் முற்றிலும் கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. மேலும், பல்வேறு வகையான மாதிரி உபகரணங்களிலிருந்து மாற்றுத்திறனாளிகள் தங்களின் விருப்பத்திற்கு ஏற்றார் போல் தேர்வு செய்து, பெற்றுக்கொள்ளும் வகையிலும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு அறுதியிட்ட வகையிலான உபகரணங்களின் விலையை விட, அதிக விலையில் உள்ள பிற உபகரணங்களை தேர்வு செய்யும் பட்சத்தில், அதற்கான கூடுதல் தொகையினை மட்டும் பயனாளிகள் செலுத்த வேண்டும்.



| | | |
|---|---|---|
| 1. | அறுதியிட்ட உபகரண வகையை தேர்வு செய்த பயனாளிகள் எண்ணிக்கை | 6,665 |
| 2. | பல்வேறு வகையான உபகரணங்களைத் தேர்வு செய்த பயனாளிகள் எண்ணிக்கை | 554 |
| | **மொத்தப் பயனாளிகள்** | 7219 |

இத்திட்டத்திற்காக, 2022-2023-ஆம் நிதியாண்டிற்கு ரூ.5,078.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.4. சமூகப் பாதுகாப்பு திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், அவர்களின் சமூகப் பாதுகாப்பினை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசு பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி வருகிறது.

### 5.4.1. பராமரிப்பு உதவித் தொகை

தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ள இயலாத மற்றும் வேலை அல்லது சுயதொழிலில் ஈடுபட இயலாத கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் ரூ.1500/- வழங்கப்பட்டது. தற்போது இப்பராமரிப்பு உதவித்தொகையானது மாதம் ரூ.2000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

| வ.எண் | மாற்றுத்திறனாளியின் வகை | வகைப்பாடு (ஊனத்தின் சதவீதம்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அறிவுசார் குறைபாடுடையோர் | 40% மற்றும் அதற்கு மேல் | 163454 |
| 2. | கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் | 75% மற்றும் அதற்கு மேல் | 32594 |



| | | | |
|---|---|---|---|
| 3. | முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோர் மற்றும் பார்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் | 40% மற்றும் அதற்கு மேல் | 1839 |
| 4. | தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் | 40% மற்றும் அதற்கு மேல் | 3740 |
| 5. | தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் | 40% மற்றும் அதற்கு மேல் | 9764 |
| **மொத்தம்** | | | **2,11,391** |

2021-2022 ஆம் ஆண்டிற்கு, அறிவுசார் குறைபாடுயுடையோர், கடுமையாக பாதிக்கப்பட்டோர், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1,97,887 பயனாளிகளுக்கு அரசு ரூ.38,815.62 இலட்சம் செலவிட்டுள்ளது. மேலும், தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட 3,740 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.707.88 இலட்சமும், தொழுநோயால் பாதிக்கப்பட்ட 9,764

பயனாளிகளுக்கு ரூ.1,879.00 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் ரூ.47,963.59 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.4.2. அதிக உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை**

பிறரைச் சார்ந்து வாழும் நிலையில் உள்ள அதிக உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள் தங்களுடன் உதவியாளரை வைத்துக் கொள்ளும் பொருட்டு ரூ.1000/– உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில், 1,656 பயனாளிகளுக்கு ரூ.155.92 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் ரூ.420.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**5.4.3. படித்த வேலை வாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகை**

படித்த வேலை வாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தில் பதிவு செய்து, ஓராண்டு காலம் வேலையில்லாமல் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பற்றோருக்கான மாதாந்திர உதவித்தொகையானது கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:–

i. பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு – மாதம் ரூ.600/–

ii. 12 ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு – மாதம் ரூ.750/–

iii. பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு – மாதம் ரூ.1000/–

இவ்வுதவித் தொகையானது, பயனாளிகளுக்கு 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்கென 2021–2022 ஆம் ஆண்டில்,

17,275 பயனாளிகளுக்கு ரூ.1,441.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2022 – 2023 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.4.4. திருமண உதவித்தொகை**

கை, கால் இயக்க குறைபாடுடையோர், பார்வைத்திறன் குறைபாடுடையோர், செவித்திறன் குறைபாடுடையோர் உள்ளிட்ட 21 வகை குறைபாடுடையோர் அனைவரும் இத்திருமண உதவித்தொகையினைப் பெறத் தகுதியுடையவர் ஆவர். இத்திட்டத்தின் கீழ் திருமண உதவித்தொகையாக பட்டதாரி அல்லாதவர்களுக்கு ரூ.25,000/– மற்றும் பட்டதாரிகளுக்கு ரூ.50,000/– வழங்கப்படுகிறது. இதில், 50 சதவீதம் ரொக்கமாகவும், மீதமுள்ள 50 சதவீதம் தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கப்படுகிறது. மேலும், திருமாங்கல்யம் செய்ய எட்டு கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 2021–2022 ஆம்



ஆண்டில், 512 பயனாளிகளுக்கு ரூ.545.86 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்திற்காக, 2022–2023 ஆம் ஆண்டிற்கு வரவு–செலவு திட்டத்தில் ரூ.545.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.4.5. இலவச பயணச்சலுகை**

**5.4.5. (அ). நூறு சதவீத இலவச பயணச்சலுகை**

அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளும் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் வெள்ளைநிற பெயர் பலகை கொண்ட பேருந்துகளில், தனியாகவும், தனியாகப் பயணிக்க இயலாத மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடனும் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். 2021–2022 ஆம் ஆண்டில், 35,792 மாற்றுத்திறனாளிகள் ரூ.3,317.46 இலட்சம் செலவில் பயனடைந்துள்ளனர்.

**5.4.5 . (ஆ). 75 சதவீத இலவசப் பயணச் சலுகை**

அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் தனியாகவும், தனியாகப் பயணிக்க இயலாத மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடனும் தமிழ்நாட்டில் உள்ள அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் மாவட்டங்களுக்கிடையே பயணம் மேற்கொள்ள, பயணங்களின் எண்ணிக்கையில் உச்ச வரம்பு இல்லாமல் அனுமதிக்கப்படுகிறார்கள். 2021–2022 ஆம் ஆண்டில், 75 சதவீத இலவச பயணச் சலுகையுடன் பயணிக்க ரூ.3,300.00 இலட்சம் செலவில் 7,54,755 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூ.3,500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.4.6. தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்**

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தில், 10 வயதுக்கு மேற்பட்ட 10,11,323 மாற்றுத்திறனாளிகள் உறுப்பினர்களாகப் பதிவு



செய்துள்ளனர். இந்த வாரியத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு மற்றும் கருச்சிதைவுக்கான உதவித்தொகை, மூக்குக் கண்ணாடி வாங்க உதவித்தொகை, விபத்தினால் ஏற்படும் உறுப்பு இழப்பிற்கான நிவாரணத்தொகை, விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கான நிவாரணத்தொகை, இயற்கை மரணத்திற்கான ஈமச்சடங்கு உதவித்தொகை ஆகிய பல்வேறு உதவிகள் இவ்வாரியத்தின் மூலம் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகின்றன:–

| | | | |
|---|---|---|---|
| 1. | தனி நபர் விபத்து நிவாரணம் | | |
| | இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணம் பின்வருமாறு | | |
| | (அ) | விபத்தினால் இறப்பு | ரூ.1,00,000/– |
| | (ஆ) | கை அல்லது கால் இழப்பு, இரு கண் பார்வை இழப்பு மற்றும் முழுமையான செயலிழப்பு | ரூ.1,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| | (இ) | ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ. 50,000/- |
| | (ஈ) | நிரந்தர ஊனம் (ஆ மற்றும் இ தவிர்த்து) | ரூ. 25,000/- |
| 2. | மாற்றுத்திறனாளி நபரின் ஈமச்சடங்கிற்கு | | ரூ. 2,000/- |
| 3. | மாற்றுத்திறனாளி நபரின் இயற்கை மரணத்திற்கு | | ரூ. 15,000/- |
| 4. | மாற்றுத்திறனாளியின் மகன் மற்றும் மகள் கல்வி பயில வருடாந்திர உதவித்தொகை | | |
| (அ) | (i) | 10- ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு | ரூ. 1,000/- |
| | (ii) | 10- ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகளுக்கு | ரூ. 1,000/- |
| (ஆ) | (i) | 11- ஆம் வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகளுக்கு | ரூ. 1,000/- |



| | | | |
|---|---|---|---|
| (இ) | (i) | 12- ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகளுக்கு | ரூ. 1,500/- |
| | (ii) | 12- ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகளுக்கு | ரூ. 1,500/- |
| (ஈ) | (i) | முறையான பட்டப் படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகளுக்கு | ரூ. 1,500/- |
| | (ii) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ. 1,750/- |
| | (iii) | முறையான பட்ட மேற்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகளுக்கு | ரூ. 2,000/- |
| | (iv) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ. 3,000/- |
| (உ) | (i) | மகன் மற்றும் மகள் சட்டம், பொறியியல், | ரூ.2,000/- |

| | | | |
|---|---|---|---|
| | | மருத்துவம், கால்நடை அறிவியல் அல்லது அதற்கு இணையான தொழிற்கல்வி படிப்புகள் பயில்வதற்காக | |
| | (ii) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ. 4,000/- |
| | (iii) | மகன் மற்றும் மகள் தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு பயில்வதற்காக | ரூ. 4,000/- |
| | (iv) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ. 6,000/- |
| (ஊ) | (i) | மகன் மற்றும் மகள் தொழிற்பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் பயில்வதற்காக | ரூ. 1,000/- |
| | (ii) | மகன் மற்றும் மகள் விடுதியில் தங்கிப் பயில்வதற்காக | ரூ. 1,200/- |



| | | | |
|---|---|---|---|
| 5. | திருமண உதவித் தொகை (கணவன் அல்லது மனைவி ஒருவருக்கு மட்டும்) | | ரூ.2,000/- |
| 6. | வாரியத்தின் பெண் உறுப்பினர்களுக்கு மகப்பேறு தொடர்பான நிதியுதவி | | |
| | 1. | மகப்பேறு | ரூ. 6,000/- |
| | 2. | கருச்சிதைவு / கருக்கலைப்பு | ரூ. 3,000/- |
| | 3. | அறுவை சிகிச்சை | ரூ. 9,000/- |
| 7. | | மாற்றுத் திறனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு நிதியுதவி | ரூ. 500/- |

2021-2022 ஆம் ஆண்டில், இவ்வாரியத்தின் மூலம் ரூ.366.86 இலட்சம் செலவில் 2534 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.329.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.4.7. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

அனைத்து மாற்றுத்திறனாளிகளும் எவ்வித கட்டணம் மற்றும் வருமான உச்சவரம்பு இல்லாமல் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தின் மூலம் ஒரு குடும்பம் மருத்துவ மற்றும் மறுவாழ்வு சிகிச்சைக்காக ஆண்டொன்றுக்கு ரூ.5.00 இலட்சம் வரை பயன்பெறலாம்.

புறஉலக சிந்தனையற்ற குழந்தைகளுக்கு, மறுவாழ்வு சேவை வழங்க அதிகபட்சமாக ரூ.60,000 வரை வழங்கப்படுகிறது. சுமார் 60 மறுவாழ்வு சேவை மையங்கள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

சனவரி 2022 முதல், இத்திட்டத்தின்கீழ், செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகள், தசைச்சிதைவு நோய் குறைபாடுள்ள குழந்தைகள், அறிவுசார் குறைபாடுள்ள குழந்தைகள், மூளை முடக்குவாதம், கற்றலில் குறைபாடு மற்றும் பல்வகை குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு



பதிவு செய்யப்பட்ட மறுவாழ்வு மற்றும் சிறப்புக் கல்வி சேவை வழங்கும் மையங்களில் சிகிச்சை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் மூளை முடக்குவாதம் மற்றும் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பராமரிப்பு சிகிச்சையை இத்திட்டத்தில் பெறலாம்.

**5.4.8. புறஉலக சிந்தனையற்றோர், மூளைமுடக்கு வாதம் (CP), அறிவுசார் குறையுடையோர் (MR) மற்றும் பல்வகை மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கான தேசிய அறக்கட்டளை சட்டம், 1999**

தேசிய அறக்கட்டளை சட்டம், 1999 கீழ், மாவட்ட ஆட்சியர் தலைமையில் பதிவுபெற்ற நிறுவனத்தின் பிரதிநிதி மற்றும் பெற்றோர் பிரதிநிதியுடன் கூடிய உள்ளூர் குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் மூலம் புறஉலக சிந்தனையற்றோர், மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோர், அறிவுசார் குறைபாடுடையோர், ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுடையோர் ஆகியோர் நலனுக்காக முடிவெடுக்கும் பொருட்டு, பாதுகாவலர் சான்று வழங்கப்படுகிறது.

இக்குழு மூலம், இது நாள் வரை 2,762 பாதுகாவலர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 5.4.9. சமூக–பொருளாதார அதிகாரமளிக்கும் திட்டங்கள்

### 5.4.9 (அ) மாற்றுத்திறனாளிகளுக்கு நான்கு சதவீத இட ஒதுக்கீட்டின் மூலம் வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்துதல்

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் நான்கு சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான உகந்த பதவியிடங்களைக் கண்டறியும் பொருட்டு, நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டு, தொகுதி "ஏ" மற்றும் தொகுதி "பி" பிரிவுகளில் 559 பதவியிடங்கள் உகந்த பதவியிடங்களாக கண்டறியப்பட்டுள்ளன. தொகுதி "சி" மற்றும் "டி" பிரிவுகளில் உள்ள பதவியிடங்கள் அனைத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு பணிபுரிய உகந்த பதவியிடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. உரிய துறைகள் தொகுதி "சி" மற்றும் "டி"–இல் உள்ள எந்தவொரு பதவியிடங்களுக்கும் இட



ஒதுக்கீட்டில் இருந்து விலக்கு தேவைப்பட்டால் உரிய துறைகள் அரசிடமிருந்து இருந்து விலக்களிப்பு உத்தரவினைப் பெறலாம்.

### 5.4.9 (ஆ) 40 சதவீதமும் அதற்கு மேற்பட்ட குறைபாடுடையோருக்கு உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் 5% இட ஒதுக்கீடு

அனைத்து அரசு உயர் கல்வி நிறுவனங்களிலும், அரசின் உதவி பெறும் மற்ற உயர்கல்வி நிறுவனங்களிலும் மாணவர் சேர்க்கையில் 40 சதவீதமும் அதற்கு மேற்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவீத இட ஒதுக்கீடும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் 21,421 மாற்றுத்திறனாளி மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில சேர்க்கை பெற்றுள்ளனர்.

**5.4.9. (இ) மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்க அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி–1 முதல்நிலை தேர்வில் தேர்ச்சிபெறும் மாணவ, மாணவியருக்கு முதன்மைத் தேர்வு எழுத வழங்கும் ஊக்கத்தொகை**

அகில இந்திய குடிமைப்பணிகள் (UPSC), தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (TNPSC தொகுதி–I) மூலம் நடத்தப்படும் முதற்கட்டத் தேர்வில் தேர்ச்சி பெற்று, முதன்மைத் தேர்விற்கு தயாராகும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் ஒன்பது நபர்கள் ரூ.4.50 இலட்சம் செலவில் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2022–2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.4.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**5.5. சுய வேலைவாய்ப்பு**

**5.5.1. தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் (NHFDC)**

தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழ்நாடு மாநில மத்திய கூட்டுறவு வங்கி கடன் வழங்கும் நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இந்த தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் (NHFDC) மூலம் கடன் பெறும் மாற்றுத்திறனாளிகள் கடனை சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்தினால், வட்டித்தொகை மாநில அரசால் செலுத்தப்படுகிறது. 2021–2022 ஆம் நிதி ஆண்டில் 5,613 மாற்றுத்திறனாளிகளுக்கு 2,612.00 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**5.5.2. குறு தொழில் மற்றும் பெட்டிக் கடை துவங்க நிதியுதவி**

குறு தொழில், பெட்டிக்கடை தொடங்க விரும்பும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.25,000/– அல்லது கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு

இவற்றில் எது குறைவோ, அத்தொகையானது மானியமாக அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில், பெட்டிக்கடை, மளிகைக்கடை, ஃபேன்சி ஸ்டோர், முடி திருத்தும் கடை, மாடு / ஆடு வளர்ப்பு, தேநீர் மற்றும் தின்பண்டங்கள் கடை, சிற்றுண்டி கடை, கணினி மையம், நகலகம் போன்ற தொழில்கள் துவங்குவதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் வருமானம் ஈட்டலாம். 2021-2022 ஆம் ஆண்டில், 1,566 மாற்றுத்திறனாளிகள் ரூ.322.78 இலட்சம் மதிப்பீட்டில் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2022-2023 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் ரூ.500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.5.3. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)**

மாற்றுத்திறனாளிகள் உற்பத்தி, வணிகம், சேவை பிரிவுகளில் சுயதொழில் முயற்சிகள், திட்டங்கள், குறுந்தொழில்களைத் தொடங்க ஊக்குவிக்கும் வகையில் பிரதம மந்திரியின்



வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் வங்கிக்கடன் உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கடன் தொகையில் மாற்றுத்திறனாளிகள் செலுத்த வேண்டிய ஐந்து சதவீத விளிம்பு தொகையானது தமிழ்நாடு அரசால் செலுத்தப்படுகிறது. இந்த மானியத்தைப்பெற, மாற்றுத்திறனாளிகள் காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம், காதி மற்றும் கிராமத்தொழில் வாரியம், மாவட்டத்தொழில் மையங்களின் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். அவ்விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டத் தேர்வுக்குழுவினர் ஆய்வு செய்து, மானியமாக விளிம்புத்தொகையினை பெறுவதற்கான பயனாளிகளை தேர்வு செய்வர். 2021-2022 ஆம் ஆண்டில், 35 மாற்றுத்திறனாளிகள் ரூ.4.37 இலட்சம் மதிப்பீட்டில் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2022-2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.5.4. வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)**

வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் (UYEGP) திட்டத்தின் கீழ், அனுமதிக்கப்பட்ட கடன் தொகையில் ஐந்து சதவீத விளிம்புத் தொகையானது தமிழ்நாடு அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையைப் பெற மாற்றுத்திறனாளிகள் மாவட்டத் தொழில் மையங்களின் இணையதளம் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டத் தேர்வுக் குழுவினர், மாவட்டத் தொழில் மையம் (DIC) அனுப்பிய விண்ணப்பங்களை ஆய்வு செய்து, இந்தத் திட்டத்தில் விளிம்புத் தொகையை மானியமாகப் பெற தகுதியுள்ள பயனாளிகளைத் தேர்வு செய்வர். 2021-2022 ஆம் ஆண்டில், 61



மாற்றுத்திறனாளிகள் ரூ.7.32 இலட்சம் மதிப்பீட்டில் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2022-2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.5.5. ஆவின் விற்பனை மையம் அமைப்பதற்கான நிதியுதவி**

மாற்றுத்திறனாளிகளை ஊக்குவித்து, சுய தொழில் தொடங்க வாய்ப்பளிக்கும் வகையில், ஆவின் விற்பனை மையம் அமைக்க மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் ஆவின் நிறுவனத்தில் செலுத்த வேண்டிய வைப்புத்தொகையான ரூ.25,000/- மற்றும் ஆவின் பால் உற்பத்தி பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.25,000/- ஆக மொத்தம் ரூ.50,000/- அரசால் பயனாளிகளுக்கு நிதியுதவி

வழங்கப்பட்டு வருகிறது. 2021–2022 ஆம் ஆண்டில், 149 மாற்றுத்திறனாளிகள் ரூ.74.50 இலட்சம் மதிப்பீட்டில் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2022–2023 ஆம்ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.5.6. புத்தக கட்டுநர் பயிற்சி**

பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளியில் பார்வையற்றோருக்கு புத்தககட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு பயிற்சி பெறுவோருக்கு தங்கும் வசதிகள் கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. பயிற்சி காலத்தில் விண்ணப்பதாரர்களுக்கு உதவித்தொகையாக ரூ.300/– வழங்கப்படுகிறது. 2021–2022 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட



17 நபர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக, 2022–2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.0.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.5.7. மாற்றுத்திறனாளிகளுக்கு பல்லூடக பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி**

கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு மல்டி மீடியா மற்றும் டிஜிட்டல் புகைப்படம் எடுப்பது குறித்து ஒரு மாதகாலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னை, தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் FCV – Digital Non–Liner Editing, AVID –Digital Non–Liner Editing, பல்லூடகப் பயிற்சி, டிஜிட்டல் –நிலை புகைப்பட பயிற்சி, ஆடியோ இன்ஜினியரிங், அனிமேஷன் போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2021–2022 ஆம் ஆண்டில், 250 மாற்றுத்திறனாளிகள் ரூ.37.38 இலட்சம் மதிப்பீட்டில் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2022-2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.37.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.5.8. செவித்திறன் குறைபாடுடையோருக்கான பொருத்துநர் பயிற்சி

செவித்திறன் குறைபாடுடையவர்களுக்கு சென்னை கிண்டியில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் இரண்டாண்டு கால பொருத்துநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 21 செவித்திறன் குறைபாடுடைய நபர்கள் இப்பயிற்சியினை பெறுகின்றனர்.

### 5.5.9. சமவாய்ப்புக் கொள்கை

சமவாய்ப்புக் கொள்கைக்குட்பட்ட அனைத்து தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பதவியிடங்களை கண்டறிதல், அப்பதவிடங்களில் மாற்றுத் திறனாளிகளை பணியமர்த்துதல் மட்டுமல்லாது மாற்றுத்திறனாளிகளுக்கும் முதியோர்களுக்கும் ஒன்றிய அரசால் வரையறுக்கப்பட்ட இணக்கமான



வழிகாட்டுதல்களின்படி, தடைகளற்ற சூழலை உருவாக்கி மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் உறுதி செய்தல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இக்கொள்கையின் படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| நிறுவனங்கள் | இதுவரை கண்டறியப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | சமவாய்ப்புக் கொள்கை வெளியிடப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை (டிசம்பர் 2021 முதல்) | மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்ததாக கண்டறியப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தனியார் நிறுவனங்கள் | 45784 | 993 | 856 |
| தொழிற்சாலைகள் | 24747 | 2059 | 2669 |
| மொத்தம் | 70531 | 3052 | 3525 |

### 5.5.10 மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம் (DELC)

தமிழ்நாடு அரசானது "சங்கல்ப்" திட்டத்துடன் இணைந்து மாநில அளவில் சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையத்தினை

ஏற்படுத்தியுள்ளது. இம்மையமானது 38 மாவட்டங்களை உள்ளடக்கிய ஆறு மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது.


இம்மையமானது நிறுவனங்களுடனும், தொழிற்சாலைகளுடனும் இணைந்து சமவாய்ப்பு கொள்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆறு மண்டலங்களிலும் நடத்திவருகிறது. இது வரை நடைபெற்ற நிகழ்ச்சிகளில் 300 நிறுவனங்கள் / தொழிற்சாலைகள் கலந்து கொண்டுள்ளனர். இந்நிகழ்ச்சிகள் மூலம் தொழிற்சாலைகளில் எவ்வகையான மாற்றுத்திறனாளிகள், எத்தகைய பணியினை மேற்கொள்ள இயலும் என கண்டறியப்பட்டு, அவர்களுக்கு உகந்த வேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த வேலைவாய்ப்புகளை கண்டறிந்து, தொழில் நிறுவனங்களுடன் இணைந்து சிறப்பு




வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி மாற்றுத் திறனாளிகள் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கான நடவடிக்கைகளை ஏற்படுத்தி தருகிறது. மாற்றுத்திறனாளிகளின் கல்வித்தகுதி, திறன், விருப்பம் மற்றும் அனுபவம் ஆகிய விவரங்களை சேகரித்து அவர்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்பினை பெற்றுத் தந்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முயற்சி செய்து வருகிறது. இதுவரை 1,276 நபர்களின் வேலைத்திறன் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு இதுவரை 538 மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்பட்டுள்ளன.

இம்மையத்தின் மூலம் ஆறு மண்டலங்களிலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன,


ஊனத்தின் தன்மை அடிப்படையில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
கை கால்; இயக்கக் குறைபாடு
303
காது கேளாமை
180
குறைபார்வையின்மை
17
கண்பார்வையின்மை
11
மனநோய்
11
அறிவுசார் குறைபாடு (மன வளர்ச்சிக் குன்றியோர்)
9
குள்ளத்தன்மை
4
புறவுலக சிந்தனையற்றோர்
1
குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு
1
அமில வீச்சினால் பாதிக்கப்பட்டோர்
1




பணித்தன்மைக்கேற்ப வேலைவாய்ப்பு ஏற்பாடு
இயந்திர ஆபரேட்டர்
விற்பனை
டெலி அழைப்பாளர்
கைவினை நெசவாளர்கள்
ஸ்கேனிங் ஆபரேட்டர்
குழு உறுப்பினர்கள்
அசோசியேட்
ஸ்டோர் கீப்பர்
பேக்கிங்
டேட்டா என்ட்ரி ஆபரேட்டர்
பிக்கர் மற்றும் பேக்கர்ஸ்
வீட்டு பராமரிப்பு
கணக்காளர்
பயிற்சி பெறுபவர்
டெலிமார்கெட்டிங்
எலக்ட்ரீஷியன்
டெலிவரி எக்ஸிகியுட்டிவ்
காசாளர்
அசெம்;பிளி ஆபரேட்டர்
ஜூனியர் எக்ஸிகியுட்டிவ்
உதவி பயிற்சியாளர்
அலுவலக உதவியாளர்
மனித வள நிர்வாகி
டெஸ் பேட்ஜ் குழு
உதவியாளர்
சாலிடரிங் மற்றும் அசெம்பிளி
72
38
34
33
25
23
19
18
15
14
14
13
12
12
11
10
10
9
9
9
8
8
8
8
7
6
5
5
5
4
4
4
4
4
4
4
4
4
3
3
2
2
2
2
2
2
2
2
2
2
2
1
0
20
40
60
80

## 6. ஒன்றிய அரசின் திட்டங்கள்

### 6.1.மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்களை வாங்குதல் – பொருத்துதலுக்கான உதவி திட்டம் (ADIP)

மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்களை வாங்குதல் – பொருத்தலுக்கான உதவி (ADIP) திட்டத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்குவதற்கு ஒன்றிய அரசால் அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து இணையதளம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மூலம் ஆய்வு செய்யப்பட்டு, மானியக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் அவ்விண்ணப்பங்களைப் பரிசீலித்து, தகுதியான விண்ணப்பங்கள் குழு உறுப்பினர்களின் பரிந்துரையுடன் தேவையான



நிதி அனுமதிக்காக ஒன்றிய அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

2021–2022 ஆம் ஆண்டில், இரண்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உதவி உபகரணங்களை வழங்குவதற்காக ரூ.18.36 இலட்சம் நிதியினைப் பெற பரிந்துரைக்கப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 6.2. தீனதயாள் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் (DDRS)

அரசு சாரா தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் குழந்தைகளுக்கான முன்பருவ பள்ளி, பல்வேறு குறைபாடுகளுக்கான பயிற்சி, ஆரம்பகால பயிற்சி, இல்லம் சார்ந்த பயிற்சித் திட்டம், தொழிற்பயிற்சி ஆகியவற்றிற்கான நிதியுதவியானது தீனதயாள் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டத்தில் வழங்கப்படுகின்றது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து இணையதளம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மூலம் ஆய்வு செய்யப்பட்டு, மானியக் குழுவின் பரிசீலனைக்கு

அனுப்பி வைக்கப்படுகிறது. இக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் அவ்விண்ணப்பங்களை பரிசீலித்து, தகுதியான விண்ணப்பங்கள், குழு உறுப்பினர்களின் பரிந்துரையுடன் தேவையான நிதி அனுமதிக்காக ஒன்றிய அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

2021–2022 ஆம் ஆண்டில், 44 தகுதியான விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு ரூ.887.24 இலட்சம் மதிப்பில் மறுவாழ்வு உதவிகள் வழங்குவதற்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**6.3. தடையற்ற சூழலை ஏற்படுத்தும் விழிப்புணர்வு பிரச்சாரம்**

சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறையால் மாற்றுத்திறனாளிகளுக்கு தடைகளற்ற சூழலை உருவாக்க Accessible India Campaign தேசிய அளவில் முதன்மை திட்டமாக துவக்கப்பட்டு, படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது மாற்றுத் திறனாளிகள்



சமவாய்ப்புக்கான சூழலைப் பெறவும், சமூகத்தோடு இணைந்து வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் முழுமையாக பங்கேற்கவும், சுயசார்புடன் வாழவும் வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 49 கட்டடங்கள் தேர்வு செய்யப்பட்டு 30 கட்டடங்களுக்கு ரூ.4,608.25 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு அக்கட்டடங்களில் தடைகளற்ற சூழலை உருவாக்க தேவையான மாற்றங்கள் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 19 கட்டடங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

**6.4. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை ( திவ்யாங்ஜன்)**

இத்திட்டத்தில் பயன்பெற, ஒன்பதாம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களின் பெற்றோரின் வருமான உச்சவரம்பு ஆண்டொன்றிற்கு ரூ.2.50 இலட்சம், 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களின் பெற்றோரின் வருமான உச்சவரம்பு ஆண்டொன்றிற்கு 2.50 இலட்சம்

மற்றும் பட்டதாரி / முதுகலைபட்டம் / பட்டயம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பயிலும் மாணாக்கர்களின் பெற்றோரின் வருமான உச்ச வரம்பு ஆண்டொன்றிற்கு ரூ.6.00 இலட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு சதவீதத்தின் அடிப்படையில், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலம் / யூனியன் பிரதேசத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கையை இந்தியாவின் மொத்த மாற்றுத்திறனாளிகளின் மக்கள் தொகையுடன் ஒப்பீடு செய்து, அதன் அடிப்படையில் ஒன்றிய அரசால் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2021–2022–ஆம் ஆண்டின் தேசிய கல்வி உதவித் தொகை பெற்ற மாணவர்கள் விவரம் பின்வருமாறு:–



| **வ.எண்** | **திட்ட பெயர்கள்** | **மொத்த மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | மேல்நிலை கல்விக்கு முன் | 4107 |
| 2. | மேல்நிலை கல்விக்கு பின் | 4003 |
| 3. | உயர் கல்வி | 9 |
| | மொத்தம் | 8119 |

## 6.5. தனித்துவம் வாய்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை (UDID)

நாடு முழுவதும் உள்ள மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கையை கண்காணிக்கவும், அனைத்துப் பயன்களைப் பெறவும் தனித்துவம் வாய்ந்த மாற்றுத்திறனாளி அடையாள அட்டைகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் வெளிப்படைத்தன்மை, செயல்திறன், மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் சலுகைகளை எளிதில் வழங்குவதோடு மட்டுமல்லாமல் சீரான தன்மையினையும் உறுதி செய்யும். மேலும் மாற்றுத்

திறனாளிகளுக்காக செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் மற்றும் சேவைகள் அனைத்தும் உரிய பயனாளிகளை சென்றடைவதையும் UDID வழங்குவதன் மூலம் உறுதி செய்யப்படும்.

மருத்துவ அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் மருத்துவச் சான்றிதழ், தற்போதைய நிழற்படம், ஆதார் எண் அல்லது அவர்களது வசிப்பிட முகவரிக்கான ஏதேனும் ஓர் ஆவணத்தை பதிவேற்றம் செய்து தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையை மாற்றுத்திறனாளிகள் பெறலாம்.

UDID பதிவுச்செய்யும் பணியை விரைவுபடுத்தும் வகையில், தமிழ்நாடு முழுவதும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. சிறப்பு முயற்சியாக, 388 கூடுதல் மருத்துவ அலுவலர்கள் மற்றும் 450 கூடுதல் தரவு உள்ளீட்டாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை 8,73,561 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, அவற்றுள் 4,70,607 UDID அட்டைகள் படிப்படியாக மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



விண்ணப்பம் முழுமையடையாத பட்சத்தில், அவ்விண்ணப்பமானது வருவாய் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் தேவையான ஆவணங்களின் நகல்களுடன் புதிய விண்ணப்பம் பெறப்பட்டு வருகிறது.

**7. உரிமைகள் திட்டம்**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் "உரிமைகள்" திட்டத்தில் மூன்று முக்கிய கூறுகள் உள்ளது. அவை "உள்ளடக்குதல் – அணுகுதல் – சமவாய்ப்புகள்" ஆகும்.

ஒரு பிரிவான, மாற்றுத்திறனாளிகளை சமுதாயத்தில் "**உள்ளடக்குதல்**" என்ற பணியானது, மாற்றுத்திறனாளிகளையும், அவர்களது தேவைகளையும் அறிவதற்கு உரிய சாதகமான சூழலை ஏற்படுத்துவதையும், அதற்கான வழிமுறைகளை நெறிப்படுத்துதலையும் குறிக்கோளாக கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் மற்றொரு பிரிவான மாற்றுத்திறனாளிகள் எளிதில் "**அணுகுதல்**"

என்பது, பொது கட்டமைப்பு வசதிகள், குடியிருப்பு, போக்குவரத்து வசதிகள், மறுவாழ்வு பணிகளின் பாதுகாப்பு ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்துதலை நோக்கமாக கொண்டுள்ளது. இதில் குடும்பம் சார்ந்த பணிகள், சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு பணிகள், ஒருங்கிணைந்த சமூக பாதுகாப்பு, மறுவாழ்வு பணிகள் மையம் அமைத்தல் போன்ற முக்கிய சேவைகள் உள்ளடங்கும்.

இத்திட்டத்தின் மூன்றாவது பிரிவான மாற்றுத்திறனாளிகளுக்கான, **"சம வாய்ப்புகள் வழங்குதல்"** என்பது, மாற்றுத்திறனாளி மாணவர்கள் உயர் கல்வியினைப் பெறுதல், தொழில் மற்றும் வியாபார சந்தைக்கு ஏற்றவாறு திறன் வளர் பயிற்சி பெறுதல் மற்றும் பணியமர்த்துதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தற்சமயம், இயக்குநரகத்தின் கீழ், அனைத்து மாவட்டங்களிலும் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்துறையின் பல்வேறு திட்டங்கள் அரசின் நிதியுதவியுடன், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்



மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக, இத்துறையின் தற்போதைய நிறுவன கட்டமைப்பினை அனைத்து நிலைகளிலும் மேம்படுத்த கருத்துருக்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரின் மேற்பார்வையில் கோட்ட அளவிலான பராமரிப்பு மற்றும் சேவை மையத்தை (OSC) உருவாக்க இத்திட்டம் முன்மொழிகிறது. ஒவ்வொரு பராமரிப்பு மற்றும் சேவை மையத்திலும் தேவையின் அடிப்படையில் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப மனித வளங்கள் ஏற்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ் வட்டார அளவில், தற்போதுள்ள ஆரம்ப காலப் பயிற்சி மையங்களை வலுப்படுத்தவும், தேவைப்படின் புதிதாக உருவாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மையங்களை முறையே சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளின் கீழ் உள்ள நகர்ப்புற / ஊரக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அல்லது வட்டார வள மையங்களுடன் இணைக்கவும் இத்திட்டம் உத்தேசித்துள்ளது.

மேலும், இந்தத் திட்டமானது, புவியியல் இலக்குகளை பொறுத்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் உதவியுடன் இயங்கும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களை தேர்வு செய்யவும், நிர்வகிக்கவும் மற்றும் மேற்பார்வைசெய்யவும் அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வழிவகை செய்கிறது.

சமுதாய அளவில் இத்திட்டத்தினை செயல்படுத்த மறுவாழ்வு நிபுணர்களை நியமிக்கவும், சமூக அடிப்படையிலான மறுவாழ்வுப் பணியாளர்கள் (CRWs) என அழைக்கப்படும் முன்களப் பணியாளர்களை உருவாக்குவதற்கும் இத்திட்டம் முன்மொழிகிறது. இவர்களின் மூலம் சமூக நிலையில் வீட்டிலேயே மாற்றுத்திறனாளிகளை மதிப்பீடு செய்யவும், தொடக்க காலப் பயிற்சி அளிக்கவும், தொழில் நுட்ப உதவியுடன் பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு சேவைகளை அளிக்கவும், பெற்றோருக்கும் பராமரிப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்கவும் இத்திட்டம் உறுதுணை செய்கிறது.



அரசின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் திட்டங்களுக்கு மாற்றுத் திறனாளிகளை ஒருங்கிணைக்க சமூக ஒருங்கிணைப்பாளர்களை இத்திட்டம் முன்மொழிகிறது. ஊராட்சி அமைப்புகள், ஏனைய உள்ளாட்சி அமைப்புகள், மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்புகள் ஆகியவற்றின் மூலம் இத்திட்டங்களைத் திட்டமிடவும், செயல்படுத்தவும், மேற்பார்வையிடவும் முன்மொழியப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இத்திட்டம் ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 8. நீடித்த அபிவிருத்திக்கான இலக்குகள் (SDG)

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த அபிவிருத்திக்கான இலக்குகளானது பின்வரும் திட்ட வரைவுகளின் அடிப்படையில் ஆரோக்கியத்துடன் கூடிய வளமான வாழ்க்கையை, 2030–ஆம் ஆண்டிற்குள் அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**நீடித்த அபிவிருத்திக்கான இலக்கு 4.5**

2030 ஆம் ஆண்டிற்குள், கல்வியில் பாலின வேறுபாடுகளை அகற்றுதல், மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வியின் அனைத்து நிலைகளிலும் மற்றும் தொழிற்பயிற்சியிலும் சம வாய்ப்பினை உறுதி செய்தல், மாற்றுத்திறனாளிகள், வம்சாவழியினர், மற்றும் விளிம்பு நிலையில் உள்ளவர்கள், பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கு கல்வி வழங்குதல்.

மேற்கூறிய இலக்கை அடைவதற்காக, 92 ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் வாயிலாக பல்வேறு வகை மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு தொடக்க நிலையிலேயே குறைபாடுகளை கண்டறிந்து பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு சேவைகள் இத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தேவையின் அடிப்படையில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசால், 23,326 மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை



வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பள்ளி இடைநிற்றலைத் தடுப்பதற்காக ரொக்க ஊக்கத் தொகை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**நீடித்த அபிவிருத்திக்கான இலக்கு 8.5**

2030 ஆம் ஆண்டிற்குள், அனைத்து மாற்றுத்திறனாளிகளும் கண்ணியமான வேலைவாய்ப்பினை பெற்று தங்களது முழு திறனை வெளிபடுத்தி சம ஊதியம் பெற வழி வகை செய்ய வேண்டும்.

இந்த இலக்கினை அடைய அரசுத்துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் நான்கு சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

சமவாய்ப்பு கொள்கையின் படி, அரசு நிறுவனங்கள், அனைத்து தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் மாற்றுத்திறனாளிகள் பணிபுரிய உகந்த பணியிடங்களைக் கண்டறிந்து, அவர்கள் பணிபுரியும் இடங்களில் தடைகளற்ற

சூழலை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம் மூலம் இதுவரை 1,276 நபர்களின் வேலைத்திறன் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இம்மையத்தின் மூலம் இதுவரை 538 மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்பட்டுள்ளன.

தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 5,613 மாற்றுத்திறனாளிகளும் பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் 35 மாற்றுத்திறனாளிகளும் பயனடைந்துள்ளனர்.

அனைத்து அரசு உயர்கல்வி நிறுவனங்களிலும், அரசு உதவி பெறும் உயர்கல்வி நிறுவனங்களிலும், மாணவர் சேர்க்கையில் 40 சதவீதம் மற்றும் அதற்கு மேற்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவீத இட ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் 21,421



மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில சேர்க்கை பெற்றுள்ளனர்.

சமவாய்ப்பு கொள்கையின் கீழ் அனைத்து தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் சமவாய்ப்பு கொள்கையினை வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தனியார் துறை நிறுவனங்களில் 856 பணியிடங்களும், தொழிற்சாலைகளில் 2,669 பணியிடங்களும் மாற்றுத்திறனாளிகள் பணிபுரிய ஏற்ற பணியிடங்களாக கண்டறியப்பட்டுள்ளது.

**9. தடைகளற்ற சூழலை உருவாக்குதல்**

சென்னை மாநகரில் 26 துறைகளின் உள்ள 50 முக்கிய கட்டடங்கள் மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்தும் வகையில் உள்ளதை உறுதிபடுத்தும் பொருட்டு, முதற்கட்டமாக தணிக்கை நடத்த மாநில அரசு அனுமதி அளித்துள்ளது. இத்தணிக்கையின் அடிப்படையில், மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள உரிய துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 10 முக்கிய நகரங்களில் 25 துறைகளின், 176 கட்டடங்கள்

மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்தும் வகையில் உள்ளதை உறுதிபடுத்தும் பொருட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் தணிக்கை நடவடிக்கைகளுக்காக ரூ.150.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இத்துறையால் ரூ.120.00 இலட்சம் செலவில், 200 சுற்றுலா தலங்களிலும் மற்றும் ரூ.474.00 இலட்சம் செலவில் வருவாய் கோட்ட அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் ஆகிய 790 கட்டடங்களிலும் தணிக்கை நடத்தப்பட்டு வருகிறது.

## 10. மாநில விருதுகள்

மாற்றுத்திறனாளிகளுக்காக சிறந்த சேவையாற்றும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தன்று, மாநில அரசு விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது.



விருதுகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ எண் | விருதின் பெயர் | விருதின் விவரம் |
|---|---|---|
| 1 | மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த தனியார் நிறுவனத்திற்கான விருது | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனத்திற்கான விருது | 10 கிராம் தங்கப்பதக்கம், ரொக்கப் பரிசு ரூ.50,000/- மற்றும் சான்றிதழ் |
| 3 | மாற்றுத்திறனாளிகளுக்கு அரும்பணியாற்றிமைக்காக சிறந்த சமூகப் பணியாளருக்கான விருது | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த சிறந்த மருத்துவருக்கான விருது | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான விருது | 10 கிராம் தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ.25,000/- |

| | | |
|---|---|---|
| 6 | மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிய சிறந்த மாவட்ட கூட்டுறவு வங்கிக்கான விருது | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |

இத்திட்டத்திற்காக, 2022-2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.5.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.1. மாற்றுத்திறனாளிகளின் சர்வதேச தினத்தை அனுசரித்தல் மற்றும் மாநில விருதுகள் வழங்குதல்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பொதுத் தீர்மானத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3-ஆம் தேதி சர்வதேச மாற்றுத் திறனாளிகளுக்கான தினம் அனுசரிக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளின் உள்ளார்ந்த திறன்கள் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்நாளில் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு மற்றும் பிற சேவைகளை வழங்கிய சிறந்த தனி நபர்கள், நிறுவனங்கள், போக்குவரத்து



பணியாளர்கள் (ஓட்டுனர்கள், நடத்துநர்கள்), மற்றும் சிறந்த தொழிலதிபர்கள் போன்றவர்களுக்கு மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன.

விருதுகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | விருதின் பெயர் | விருதுகள் எண்ணிக்கை | விருதின் விவரம் |
|---|---|---|---|
| 1. | மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 1 விருது | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3. | மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த சிறந்த ஆசிரியர் | 3 விருதுகள் | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |

| | | | |
|---|---|---|---|
| 4. | மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த சிறந்த பணியாளர் | *5 விருதுகள் | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5. | மாற்றுத்திறனாளிகளைஅதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6. | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் | 2 விருதுகள் | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7. | மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் | 2 விருதுகள் | 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| **மொத்தம்** | | **15 விருதுகள்** | |



இவை தவிர கூடுதலாக ஆறு விருதுகளை சிறந்த பணியாளர் பிரிவின் கீழ் பின்வரும் குறைபாடுடையோருக்கு வழங்கி வருகிறது:–

1. பேச்சு மற்றும் மொழி குறைபாடுடையோர் (Speech and Language Disability)

2. புற உலக சிந்தனையற்றோர், கற்றலில் குறைபாடுடையோர் (Autism spectrum disorder, Specific learning disability)

3. மனநோய் (Mental illness)

4. இரத்த உறையாமை நோய், இரத்த அழிவு சோகை மற்றும், கதிர் அரிவாள்

இரத்த சோகை (Haemophilia, Thalassemia and Sickle cell Anemia)

5. திசு பன்முகக் கடினமாதல் மற்றும் நடுக்குவாதம் (Multiple Sclerosis and Parkinson's Disease)

6. ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுத் திறன் குறைபாடுடையோர் (Multiple Disability)

மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்களும் இந்த விழாவில் வழங்கப்படுகின்றன. அரசு துறைகள் மற்றும் அரசு

நிறுவனங்களில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளி ஊழியர்களுக்கும் இந்த விழாவில் பங்கேற்க சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2022–2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.40.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. புதிய முன்னெடுப்புகள்**

**11.1. மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை உயர்த்தி வழங்குதல்**

அறிவுசார் குறைபாடுடையோர், கடுமையாக பாதிக்கப்பட்டோர், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோர், தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோர், தண்டுவட மரப்பு நோய் ஆகிய நாட்பட்ட நரம்பியல் பாதிப்பிற்கு உள்ளானவர்கள், பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகையானது ரூ.1500/–லிருந்து



ரூ.2000/– ஆக சனவரி 2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**11.2 சிறப்பாசிரியர்களுக்கான மதிப்பூதியத்தினை உயர்த்தி வழங்குதல்**

சிறப்பு பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்கள் மற்றும் தசை பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியமானது ரூ.14,000–லிருந்து ரூ.18,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**11.3.மாற்றுத்திறனாளி மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகள் வெளியீடு**

மாற்றுத்திறனாளி மாணவர்கள் கல்வித் தேர்வுகளையும், பணி நியமனத் தேர்வுகளையும் எழுதுவதற்கு ஏதுவாக வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண்.8, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந.3) துறை, நாள்.21.09.2021 வெளியிடப்பட்டது.

## 11.4 மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களின் மாதிரிகளை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறையை அறிமுகப்படுத்துதல்

பல்வேறு வகையான மாற்றுத் திறனாளிகளுக்கு 24 வகையான உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வகையான உபகரணத்திலும் ஒரு மாதிரியான உபகரணம் மட்டும் வழங்கப்படுகிறது.

உபகரணத்திற்கான தேர்வினை பயனாளிகளே தேர்வு செய்வதற்காக இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டு, அறுதியிடப்பட்ட வகை உபகரணம் முழுமானியத்துடன் வழங்கப்படுகிறது. இத்திட்ட முறையில் பல்வேறு வகையான மாதிரிகளில், தங்களுக்குத் தேவைப்படும் உபகரணங்களை தாங்களே தேர்வு செய்ய ஏதுவாக பயனாளிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டம் மூலம் வழங்கப்படும் அறுதியிட்ட வகை உபகரணங்களுக்கான தொகை முழுமையாக அரசால் வழங்கப்படும். இந்த அறுதியிடப்பட்ட வகை உபகரணங்களை விட, விலை கூடுதலாக



இருக்கும் நேர்வில் கூடுதல் தொகை மட்டும் பயனாளிகளால் செலுத்தப்படும்.

## 11.5 இ–சேவைகளை அறிமுகப்படுத்துதல்

மாற்றுத்திறனாளிகள் அரசு அலுவலகத்தை நேரடியாக அணுகாமல் பல்வேறு சேவைகளை பெற விண்ணப்பங்களை இணையதளத்தின் முலம் விண்ணப்பிக்கும் வகையில் பின்வரும் நான்கு சேவைகள் இ–சேவைகளின் கீழ் வழங்கப்படுகின்றன, மாற்றுத்திறனாளிகள் பின்வரும் சேவைகளைப் பெற இ–சேவை மையத்தினை அணுகலாம்:–

i. வங்கிக் கடன் உதவிக்கான விண்ணப்பம்
ii. மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைக்கான விண்ணப்பம்.
iii. பராமரிப்பு உதவித்தொகைக்கான விண்ணப்பம்
iv. திருமண உதவித்தொகைக்கான விண்ணப்பம்

## 11.6 சம வாய்ப்பு கொள்கை

சம வாய்ப்பு கொள்கையின் படி, சம வாய்ப்பு கொள்கைக்குட்பட்ட அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள்/ தொழிற்சாலைகள் மாற்றுத்திறனாளிகள் பணிபுரிய ஏற்ற பணியிடங்களை கண்டறிந்து, அவர்கள் பணிபுரியும் இடங்களில் தடைகளற்ற சூழ்நிலைகளை உருவாக்கிட வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

## 12. முடிவுரை

தமிழ்நாடு அரசு, ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான இலக்கினை அடையவும், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சட்டப் பிரிவுகளையும் செயல்படுத்துவதன் மூலமாக தடைகளற்ற சூழலை ஏற்படுத்தி மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய சமத்துவ சமுதாயத்தை உருவாக்கிட தொடர்ந்து பாடுப்படும்.



மாற்றுத்திறனாளிகள் இணையற்ற ஆற்றல் பெற்றவர்கள் – அவர்கள் முழுமையான ஆற்றலை வெளிப்படுத்தித் தன்னம்பிக்கையுடனும், சுடர்விடும் அறிவுடனும் விளங்க இத்துறை தன்னை அர்ப்பணித்துத் தொடர்ந்து செயல்படும்.

**மு.க.ஸ்டாலின்**
**முதலமைச்சர்**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள மல்லவாடியில் அரசு மறுவாழ்வு இல்லத்திற்கான புதிய கட்டடம் 03.12.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விழுப்புரம் மாவட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கான புதிய கட்டடம் 13.01.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.



# முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோர் மற்றும் தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி



இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட

பெட்ரோல் ஸ்கூட்டர்



முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான
சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இணைப்பு
சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்



# மடக்கு சக்கர நாற்காலி



குறைந்த பார்வையுடையோருக்கான உருப்பெருக்கி




பார்வை குறைபாடுடையோருக்கான பிரெய்லி கை கடிகாரம்



பார்வை குறைபாடுடையோருக்கான கருப்பு கண்ணாடி



பார்வையற்றோருக்கான ஒளிரும் மடக்கு குச்சி





தோள்பட்டை தாங்கிகள்　　முழங்கை தாங்கி



மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம்



காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவி



செயற்கை அவயங்கள்




# ஆவாஸ் மென்பொருளுடன் கூடிய கையடக்கக் கருவி

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.